நன்றி - நூலகத்திட்டம்

Registered as a newspaper in SriLanka.

# சரிநிகர்

இதழ்-3 செப்./ஒக்ரோபர்'90 விலை: ரூ. 5.00



திரு. கு. குகமூர்த்தி

இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் (MIRJE) செயற்குழு உறுப்பினரும் மனித உரிமைகள் வாதியுமான குகமூர்த்தி அவர்கள், வேலைத்தலமான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்து வீடு திரும்பும் வழியில் ஆயுததாரிகளால் கடத்தப்பட்டுள்ளார்.

உலகம் முழுவதும் இயங்கும் மனித உரிமைக் குழுக்களும், இலங்கையின் பல முற்போக்கு அமைப்புகளும் அவரை விடுதலை செய்யுமாறு அரசைக் கோரியுள்ளன!

# தீர்ப்பு மக்களிடம்.

வடக்கு கிழக்கில் மக்களுக்கு எதிராக அரசு நடாத்தி வரும் யுத்தத்திற்கு இப்போது வயது மூன்று மாதம். அகதிகளின் தொகை இப்போது பத்து லட்சத்தை எட்டி விட்டது. இவ்வகதிகளில் மிகப் பெரும்பாலானோர் தமிழ் மக்களும் முஸ்லீம் மக்களும் தான்.

யுத்தத்தில் கொல்லப்பட்ட 'அப்பாவிப் பொது மக்களின்' எண்ணிக்கை கணக்கிலடங்கா புள்ளி விபர ங்களுக்குள்ளால் குருதி சிந்துகிறது.

முன்னெப்போதுமில்லாத தன்னம்பிக்கையுடன் அரசும் புலிகளும் போரிடுவது போலத் தோன்றுகிறது. எல்லா யுத்தங்களைப் போலவே இந்த யுத்தத்திலும் 'தர்மம்' என்று எதுவுமே கடைப்பிடிக்கப்படவில்லை.

இரு பகுதியிலுமே பொதுமக்களின் கருத்துத் தளம் (civil society என்ற கருத்தில்) குரல்வளை நெரிக்கப்பட்ட நிலையில் உள்ளது. உண்மை 'பங்கருக்குள்' ஒளித்து விட்டது. 'பத்து நாட்களில் யாழ்ப்பாணம் பஸ்மம்' என்றவர்களின் சந்தடியையும் காணவில்லை!

யுத்த வெறியிலும் ஓயாத அரசியல் அம்புலன்ஸ் கொழும்பு 'சுத்து' என்ற திருவிழா நாள் விழா இரைச்சலுக்குள்ளும் "மாத்து"களுக்குள்ளும் பிறந்த அமளிகளுக்குள்ளும் கோலாகலங்களுக்குள்ளும் வடக்குக் கிழக்கு மக்களின் சுய நிர்ணய உரிமைப் பிரச்சினை 'காணத்துப்' போயிற்று!

வடக்குக் கிழக்கில் மக்கள் போகிற போக்கில் உள்ளவர்களுக்கும் வாழ்கிறார்கள் என்பதே தலைநகரில் வெளியுலகுக்கும் மறந்து போய்விடும் என்று தோன்றுகிறது. இந்த நிலையில் கொழும்பில் இப்போது மையம் கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கட்சிகள், முன்னணிகள், இயக்கங்கள் என்ன செய்கின்றன? அவர்களுடைய நிலைப்பாடு தமிழ் முஸ்லீம் மக்களுக்கான அவர்களுடைய கடப்பாட்டுடன் பொருந்தி வருகிறதா என வினா எழுப்ப வேண்டியுள்ளது.

இந்த தமிழ் குழுக்கள் அனைத்தும் விடுதலைப் புலிகளின் இயக்க விதி வசத்தால் (ஒன்றுக்கு மேலே எப்போதும் வேண்டாம்) இந்தியாவிலும் இலங்கையிலும் ஒதுங்கியவர்க்ள் என்பது ஒருவகையில் புரிந்து கொள்ளப்படக் கூடியதாயினும் இன்றைய யுத்தம் தொட தமிழ் முஸ்லீம் மக்களின் சுயநிர்ணய உரிமை ர்பாகவும் அவர்களுடைய நிலைப்பாடு பொதுவாகக் பற்றியும் கேள்விக்குரியது.

"கெஞ்சினால் மிஞ்சுவர் மிஞ்சினால் கெஞ்சுவர்" என்ற உண்மையை இலங்கை அரசாங்கத்துடனான உறவில் இவர்கள் கடைப்பிடிக்க முடியும், என்று தோன்றவில்லை.

ஏனென்றால் இவர்கள் தமிழ் மக்களுக்கும் அவர்களது உரிமைப் போராட்டத்திற்கும் எதிராக இலங்கை அரசு நடாத்தும் தனது அடக்குமுறை யுத்தத்தை புலிகளின் ஜனநாயக விரோத அராஜகத்துக்கு எதிரான யுத்தமாக பிரச்சாரித்து வருவதை மறுக்கவில்லை. அதாவது அரசின் அத்து மீறிய நடவடிக்கைகளை இவர்கள் கண்டிக்க ஒரு போதும் தயாராகவில்லை.

மக்களிடமிருந்தும் அவர்களின் நலன்களிலிருந்தும் அந்நியமாகிவிட்ட இவ்களால் ஒரு போதும் அரசை மிஞ்ச முடியாது. இலங்கை அரசிடம் 'கெஞ்சி' எதையும் பெற்றுவிட முடியாது என்பது தமிழ் மக்களின் கடந்த 40 ஆண்டு காலப் பாடம். அரசை 'கெஞ்சவோ' 'மிஞ்சவோ' வக்கற்ற நிலைக்குள் வந்து நிற்பவர்கள் இவர்கள்.

புலிகளை ஃபாசிஸ்டுகள் ஜனநாயக விரோதிகள் இவர்கள் தம்மளவில் தாமும் அவ்வாறு நடந்து கொள்வதுடன் இவ்வியல்புகளில் 'புலிக்கும் புலியான இலங்கை-இந்திய அரசுகளுடன் நட்புறவுக் கூட்டு மற்றும் அந்நியோன்னியங்களை கொண்டிருந்தவர்கள்/ இருப்ப வர்கள்.

இவர்களின் 'ஜனநாயகம்' என்ன என்பது இவர்களுக்கு புரியாமல் இருக்கலாம். ஆனால் அதை மக்கள் புரிந்து கொள்ளாமல் இருக்க மக்கள் ஒன்றும் ஏமாளிகள் அல்ல. ஈரோஸின் தலைவர் வே.பாலகுமார் ஒரு முறை சொன்னார் "ஒரு காலம் வரும் அப்போது மக்கள் எல்லா இயக்கங்களையும் தூக்கி வீசுவார்கள் என!" உண்மையில் இவர்களிடம் இருக்கிற ஒரே நோக்கம் புலிகளை முற்றாக அழிப்பது, அரசிடம் இருப்பதோ புலிகளின் பெயரால் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தையே நசுக்குவது. இரண்டுபேரும் தத்தமது நோக்கத்தில் 'புலி அழிப்பில்' ஒன்று சேர்ந்துள்ளனர். மக்கள் நலன் பற்றிய ஒரு முடிவு இருவருக்குமே கிடையாது என அக்கறையும் கிஞ்சித்தளவான நிருபிப்பதே.

அழிக்கப்படுவது புலிகள் அல்ல, அகதிகளாவது புலிகள் அல்ல, நசுக்கப்படுவதும் புலிகள் அல்லமாறாக தமிழ், முஸ்லீம் மக்களும் அவர்களது உரிமைகளுமே! உண்மையில் மக்களின் நலனில் தமிழ், இவர்களுக்கு முஸ்லீம் மக்களின் உரிமைப் போரில் அக்கறை இருந்தால் குண்டுத் தாக்குதலை நிறுத்தும்படி கோருவதற்கு பதில் யுத்தத்தை நிறுத்தும்படியும் உணவு விநியோகத்தைக் கோருவதற்குப் பதில் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும்படியும் கோர வேண்டும். அதற்காகப் போராட வேண்டும்.

புலிகளின் "பாசிசப்" பிரச்சினை தமிழ் மக்களின் பிரச்சினை. அதை தனியாக அணுக வேண்டும். ஆனால் தமிழ் மக்களின் வாழ்வுப் பிரச்சினை அது அல்ல; அது அவர்களின் உரிமை பற்றிய பிரச்சினையான தேசிய சுயநிர்ணய உரிமைப் பிரச்சினை. அதைப் பற்றி பேசாது வேறு எதைப் பற்றிப் பேசுவதும் அர்த்தமற்றது. மக்களுக்கு எதிராக யுத்தம் நடாத்தும் அரசிடம் கொல்லப்படுவது குறித்து முறையிடுவது வேடிக்கையானது.

அப்பாவி மக்களே பாதிக்கப்படுகிறார்கள் என்று குரலெழுப்பினாலும் அவ்வப்போது அரசு யுத்தத்திலீடுபடுவது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காமல் என்பதை அவர்கள் மக்களுக்கு எதிரானது இது இலங்கை முதன்மைப்படுத்தத் தவறி விட்டார்கள். சிங்கள பௌத்த அரசின் அடிப்படை அம்சமான சிங்கள பேரினவாத வேரை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்பதைக் காட்டுகிறதா அல்லது பிரதான எதிரி சிங்கத்திலிருந்து புலிக்கு மாறிவிட்டதைக் காட்டுகிறதா? எவ்வளவு அராஜகவாதிகளாகப் புலிகள் இருந்த போதிலும் யுத்தம் இருக்கும் வரை வடக்குகிழக்கு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை—புலிகளைப் பற்றிக் கவலைப் படாமலேனும்—அங்கீகரிக்கப்படும் வரை அவர்களின் உரிமை சிங்கள பௌத்த ராணுவமாக இருக்கும் வரை புலிகளை வெல்வதோ அல்லது அவர்களை தனிமைப் படுத்துவதோ இயலாது.


இன்னொரு புறத்தில் இந்தத் தமிழ் குழுக்கள் சொல்வது போல விடுதலைப் புலிகளுக்கான அமைப்புகள் தானா? கடந்த காலமும் 'இல்லை' என்ற பதிலை நம் இவர்களுடைய

[illegible]

யுத்தத்தை நிறுத்து! சுயநிர்ணய உரிமையை அங்கீகரி!!



யாழ். நிலைமை: பக்-3



காத்தான்குடி படுகொலை

நன்றி - நூலகத்திட்டம்



இலங்கை வானொலியின் தமிழ் சேவை இப்பொழுது சில புதிய நிகழ்ச்சிகளை சேர்த்துள்ளது. அவற்றிலொன்று "இன ஐக்கியத்தை" வலியுறுத்தும் சிங்கள பாடல்களை தமிழில் மொழிபெயர்த்து ஒலிபரப்புவது. "இது ஒரு பல்மொழி பேசும் பல்லின மக்கள் வாழும் நாடு. இதில் அனைவரும் ஐக்கியமாக வாழவேண்டும்" என்பதே இந்தப் பாடல்களின் சாரம்.

வானொலியும் பத்திரிகைகளும் என்னதான் வரிந்துகட்டிக்கொண்டு "இன ஐக்கியம்" பற்றிப் பேசிய போதும், அந்த இன ஐக்கியத்தின் லட்சணம் என்ன என்பது கூர்ந்து கவனிக்கிற ஒவ்வொருவருக்கும் வெளிப்படையாகவே தெரிகிறது. சிங்கள நிகழ்ச்சிகளின் தமிழ் மொழிபெயர்ப்பாக தமிழ்ச்சேவையை நசுக்குவது ஒருபுறமிருக்க, தமிழ் மொழியின் பாவனையிலிருக்கும் சொற்களை கூட தாங்கள் விரும்பியபடி மாற்றுவதும் நடக்கத் தொடங்கியுள்ளது. இன ஐக்கியம் என்பது சிங்கள பௌத்த இனவாத கருத்துக்களை தமிழில் மொழிபெயர்ப்பதே என்பதுதான் எமது கடந்த காலம் முழுவதுமான அனுபவம். இப்போது நடப்பதும் அதற்கு ஒரு நல்ல உதாரணமாகும்.

தமிழ் மொழியில் இதுகாறும் பயன்பட்டு வந்த "பறங்கியர்" என்ற சொல்லை மாற்றி "பேகர்" என்ற ஆங்கிலச் சொல்லை பாவிக்குமாறு இலங்கை வானொலியின் தமிழ்ப்பிரிவு பணிக்கப்பட்டுள்ளதாம். அது மட்டுமல்ல தமிழ்ச் சேவையில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளை கூர்ந்து கேட்டு, ஏதாவது "பயங்கரவாத" ஊடுருவல் வந்து விடுகிறதா என்று பார்க்க பௌத்த பிக்கு ஒருவரையும் கூட்டுத்தாபனத் தலைவர் நியமித்துள்ளாராம்.

இலங்கை. ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இருக்கும் அதிகாரிகள் எவருக்காவது முதுகெலும்பும் வாயும் இருந்ததாக வரலாறில்லையே !.

இத்தகைய "அரசாங்க தமிழ்ச் சேவைகள்" ஒரு விஷயத்தை ஞாபகமூட்டுகின்றன. உயிரியல் "பதாங்கம்" (vestige) என்று சொல்வார்கள். அதாவது முன்பு ஓரளவாவது பாவனையிலிருந்து இப்போது இல்லாமல் போன ஒரு அங்கம் சிதைந்து மூளியாகக் காணப்படுவது. குரங்கிலிருந்து மனிதன் பரிணாமம் பெற்ற போது வால் அற்று போய் விட்டது. ஆனால் மனிதனில் இன்னும் வாலுக்குப் பொறுப்பான குயில் அலகு என்பு உண்டு. அது பதாங்க நிலையில் உண்டு. இலங்கை அரசின் எல்லா இடங்களிலும் தமிழ்மொழி இப்போது ஒரு பதாங்கம்.

## மெல்லத் தமிழினி.

சிங்கள மக்களுக்குக் காலம் காலமாகத் திணிக்கப்பட்டு வந்த "வரலாறு" அவர்கள் ஆரியர் என்பதும் தமிழர்கள் திராவிடர்கள் என்பதும் மட்டுமல்ல ஆரியர்கள். உயர்ந்தவர்கள், வெள்ளை நிறத்தவர் என்பதுமாகும்.

ஆரியம், திராவிடம் என்ற பகுப்பு வெறுமனே மொழியியல் சார்ந்தது (lingustic). மானுடவியலினடியாக தமிழர்களோ சிங்களவர்களோ தென்னிந்தியர்களோ எவ்வகையிலும் வேறுபட்டவர்கள் அல்லர் என்பது நீண்டகால மானுடவியல், சமூகவியல் உண்மை. இதுபற்றி பேராசிரியர் கணநாத் ஒபேசேகரா, என்னும் சிறப்புமிக்க இலங்கை மானுடவியலாளர், பேராசிரியர் மைக்கேல் ரொபேர்ட்ஸ் ஆகியோர் நிறையவே எழுதியுள்ளார்கள். எனினும் பரந்த மட்டத்தில் (popular level) இவர்களுடைய கருத்துக்கள் சென்றடையவில்லை.

இலங்கையில் "அறிவு" கோலோச்சும் காலம் என்று வருகிறதோ அன்றுதான் மக்களுக்கு மாயைகளிடமிருந்து விடுதலை கிடைக்கும்.

அதுவரை, நமது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் முன்பொருதரம் ஜே.ஆரின் மூக்கையும் இந்திரா காந்தியின் மூக்கையும் ஒப்பிட்டு "ஆஹா நாங்கள் ஆரியர்தான் பார் மூக்கை !" என்று சொன்னது போலவும் கறுப்பு=தமிழ்=புலி எனும் சமன்பாடு போலவும் நிலைமை தொடரும்.



வடக்கு கிழக்கில் யுத்தத்தினை நடாத்திவரும் அரசு தமிழ்=புலி என்ற சமன்பாட்டின்படி செயல்பட்டு வருகிறது. தமிழ் பத்திரிகை (சரிநிகர்) வைத்திருந்த வாசகர் ஒருவர் புலியெனச் சந்தேகிக்கப்பட்டதும் இப்பத்திரிகையை விநியோகிக்க விநியோகஸ்தர்கள் பயப்படுவதும் வீடுகளிலும் வீதிகளிலும் பொதுமக்கள் குண்டுவீசிக் கொல்லப்படுவதும் இதையே காட்டுகிறது. இஸ்ரேலியர்கள் 100 தமிழர்களை கொன்றால் 10 பயங்கரவாதிகள் சாவர் என்று அரசுக்கு "ஐடியா" கொடுத்தார்களாம். அரசோ முழு தமிழர்களையும் கொன்றால் முழுப் புலிகளும் அழிவார்கள் என்று நினைக்கிறது.

இது கொரில்லா யுத்தத்தை நசுக்க முனையும் உலக நாடுகளின் ஒடுக்குமுறை அரசுகளிற்கு அமெரிக்கா இஸ்ரேல், பிரித்தானியா கூட்டாக அளித்திருக்கும் counter-insurgency வழிமுறைகளை ஞாபகப்படுத்துகிறது. அடிப்படை விஷயம் இதுதான்

ஒரு கொரில்லா நீரில் வாழும் மீன் போன்றவர். மக்களும் மக்களது ஆதரவுமே கொரில்லா எனும் மீனைத் தாங்கும் நீர் என்பது கொரில்லா யுத்தத்தின் அடிப்படை மார்க்சியப்பாடம்.

கொரில்லாக்களை ஒழிக்கும் எதிர் நடவடிக்கைகள் கொரில்லா எனும் மீனை நீரிலிருந்து (மக்களிலிருந்து) பிரித்துத் தனிமைப்படுத்துவதைச் செயன்முறையாக கொண்டவை. இச்செயல்முறைகள் வெற்றி தராதபோது வழி என்ன? "நீரை வற்றச் செய்யுங்கள் முற்றாக !






விமான நிலையத்திற்கு சென்று கொண்டிருந்த எமது ஓட்டோ நிறுத்தப்பட்டது. நானும் .வெளிநாடு போகவிருந்த நண்பரும் இன்னொரு நண்பருமாக சென்று கொண்டிருந்த போது இது நடந்தது.

தலையை குனிந்து ஒரு பொலிசாளன் என்னிடம் கேட்டான். "தெமிழத முஸ்லிம்த? (தமிழனு முஸ்லிமா?) காத்தான்குடிப் படுகொலையின் பின் 2 நாட்களின் பின் நடந்த சம்பவம் இது. "தமிழ் என்றேன்."

"பைண்ட" என்று இறங்கச் சொன்னார்கள். பொதிகளை முழுமையாகச் சோதித்தார்கள். விமான நிலையத்தை நோக்கி சென்ற நாம் என்ன செய்ய முடியும். பேசாமல் நின்றோம். ஒரு வேளை முஸ்லிம் என்று சொல்லியிருக்கலாமோ என்று சொன்னார் என்னுடன் கூடவந்த நண்பர்.

சொல்லியிருக்கலாம். சொன்னால் மட்டுமென்ன சோதனை நிற்கவா போகிறது? தமிழரோ, முஸ்லிமோ, சிங்களவராக இல்லாதவரை நிலைமை கவலைக்கிடம்தான். "தற்போதைக்கு, முஸ்லிம் மக்களைத் தவிர்க்க" என்பது இலங்கை "சனநாயக சோசலிச குடியரசின்" எண்ணம் என்று தெரிகிறது.



இந்து சமய கலாசார தமிழ் அலுவல்கள் அமைச்சின் அழைப்பிதழுடன் அதன் மாதாந்த கருத்தரங்கிற்கென ஒரு தமிழ்ப்பத்திரிகையாளர் கொழும்பு வோக்சால் வீதியில் உள்ள அதன் அலுவலகத்தின் மேலுள்ள மண்டபத்திற்கென சென்றார். கருத்தரங்கு அங்குதான் நடப்பதாக இருந்தது. வாசலில் இருந்த பாதுகாவலர் அவரை உள்ளே போக அனுமதிக்கவில்லை. இந்த அப்பாவி பத்திரிகையாளர் தனது அழைப்பிதழை காட்டினார். இது என்ன? இதில் எழுதியிருப்பதை என்னால் வாசிக்க முடியாது. எனத் திமிராக பதிலளித்தான் காவலாளி. அது பற்றி தனக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் அதிலுள்ளது என்ன என்று தெரியாதவரை தான் எப்படி அனுமதிப்பது என்றும் பதில் சொன்னான் அவன். பத்திரிகையாளருக்கு சற்று கோபம் வந்து விட்டது. "இதை தெரிந்து வைத்திருக்க வேண்டியது எனது வேலையல்ல. அது உனது வேலை" என்று சீறியிருக்கிறார். தனது பத்திரிகை அடையாள அட்டையை காட்டி தான் விசேடமாக அழைக்கப்பட்டதாகவும் கூறியிருக்கிறார். அமைச்சரும் வருவதாக இருந்த அந்தக் கருத்தரங்கிற்குள் நுழைய அவர் நிறையவே சண்டை பிடிக்க வேண்டியிருந்தது. "ஒவ்வொருநாளும் இப்படியே சண்டை பிடிப்பதே நமது தலைவிதியாகிப் போய்விட்டது" என அவர் கவலைப் பட்டார். தமிழ் மொழி அலுவல்கள் அமைச்சின் நிலையே இதுதான் என்பதை நினைக்க அழுவதா சிரிப்பதா என்று புரியவில்லை.

அண்மையில் மாளிகாவத்தைப் பகுதியில் ஒரு சுவையான சம்பவம் நடந்தது. ஓட்டோ ஒன்றில் வந்த இரு இளைஞர்கள் ஓட்டோவைப் பரிசோதித்த பொலிசாரைத் தள்ளிவிட்டு துப்பாக்கியால் வானத்தை நோக்கி சுட்டுவிட்டு தலைமறைவாகிவிட்டனர். இந்த இளைஞர்களை "கொட்டி கொட்டி" என சத்தமிட்டு மக்கள் அண்மித்தபோது அவர்கள் துப்பாக்கியால் மேல்நோக்கி சுட்டுவிட்டு மறைந்ததாக சொல்லப்படுகிறது. சம்பவம் நடந்த சிறிது நேரத்திற்கெல்லாம் அவ்விடத்தால் பயணம் செய்த எனது நண்பர் ஒருவர் இந்தத் தகவலை என்னிடம் கூறினார். எப்படி அவ்வளவு இலகுவாக அவர்கள் புலிகள்தான் என மக்கள் முடிவு கட்டினார்கள்? என்று நான் கேட்டேன். "அவர்கள் கறுப்பாக இருந்தார்களாம்" என்று சொன்னார் நண்பர். கறுப்பு=தமிழ்=புலி என்ற சமன்பாடு ஒன்று பாவனையிலிருப்பது போலத் தெரிகிறது. இது உண்மையெனில் கறுப்பாக இருக்கும் பெரும்பாலான சிங்கள மக்கள் (ஜனாதிபதி,அமைச்சர்கள் பலர் உட்பட) கவனமாயிருக்க வேண்டும் !

இந்த இடத்தில் பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவப் பேராசிரியர் வலன்றைன் பஸநாயக்க தெரிவித்திருக்கும் ஒரு தகவல் எனக்கு ஞாபகம் வந்தது. 1983 இல் அவர் சொன்னார் "உருவத்திலும் உடல் அமைப்பிலும் தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் எந்தவித புள்ளி விபரமுமற்றவை. நகரவாசிகளான தமிழ் சிங்கள வர்கட்கிடையிலான வேறுபாடு இலங்கையின் நகர கிராமவாசிகட்கிடையிலான வேறுபாட்டுடன் ஒப்பிடுகையில் புறக்கணிக்கத் தக்கவை.

தமிழர்கள் கறுப்பு, சிங்களவர்கள் வெளுப்பு என்று ஒரு அபிப்பிராயம் சிங்கள சமூகத்தின் பல மட்டங்களில் இருப்பதற்கும், இந்த "மாயை"யை படித்தவர்கள் பலரே நம்புவதற்குமான காரணம் என்ன?

## க(ஹெ)லி காலம்!

கோட்டை முகாமுக்குள் போட்ட உணவுப் பொதிகள் எல்லாம் கோட்டைக்கு வெளியே விழுவதையும், அவற்றை விடுதலைப்புலிகள் எடுத்துப் போவதையும் கண்ட வான்படையினருக்கு ஒரு திடீர் எண்ணம் தோன்றியது. உணவுப் பொதிகளுடன் சேர்த்து ஒரு வெடிகுண்டையும் வைத்து போட்டுப் பார்த்தார்கள். இம்முறை மிகக் கவனமாகவே கோட்டைக்கு வெளியில் விழுத்தும் நோக்குடன் அது போடப் பட்டது.

ஆனால், வழமை போலவே படையினரின் இலக்கை லட்சியம் செய்யாத பொதி கோட்டைக்குள் போய் விழுந்தது.

உணவுப் பொதியை எடுக்க வந்த இரண்டு இராணுவத்தினரை உட்கொண்டுவிட்டு உணவுப் பொதியையும் வீசிவிட்டு வெடித்துச் சிதறியது உள்ளிருந்த குண்டு.

## கொடுக்கிற தெய்வம்....

யாழ் கோட்டை முகாமுள் முற்றுகைக்குள்ளாகியிருக்கும் இராணுவத்தினருக்கு உணவளிப்பதற்காக பத்தாயிரம் அடிகள் உயரத்திலிருந்து உணவுப் பொதிகள் போடப்பட்டது யாவரும் அறிந்த விடயம்.

அதேயுயரத்திலிருந்து, சிலவேளைகளில் அதைவிடவும் உயரத்திலிருந்து விடுதலைப்புலிகளின் முகாம்கள் மீது இலக்குத்தவறாமல் துப்பாக்கிப்பிரயோகம் செய்து, கணக்குத் தவறாமல் இறந்த புலிகளின் தொகையை அறிவித்துக் கொண்டிருக்கும் படையினரால் பாரிய விஸ்தீரணமுள்ள கோட்டை முகாமுக்குள் உணவுப் பொதிகளை சரியாகப் போடமுடியாமல் போனது எப்படி என்பதுதான் பெரிய மர்மம்.

போடப்பட்டு கோட்டைக்கு வெளியே வீழ்ந்த உணவுப்பொதிகளில் ஒன்று கோட்டையிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் சென்ற் பீற்றர்ஸ் தேவாலயக் கூரையை பிய்த்துக் கொண்டு விழுந்தது.

"கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும்" என்று கேள்விப்பட்ட யாழ்ப்பாணத்தவர் ஒருவர் தெய்வத்திற்கே கூரையைப் பிய்த்துக் கொடுக்கும் இலங்கையின் வான்படையினரின் மகிமையை எண்ணிச் சிலிர்த்துப் போனார்.

## 'அம்மையே' அப்பா....

கொழும்பிலுள்ள தேசிய ஒருமைப்பாட்டுக்கான ஒரு குழு வடக்கு கிழக்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தை நிறுத்தவும் அமைதியை உருவாக்கவும் ஒரு தீர்வு காணவும் அனைத்துக் கட்சிகளுடனும் தொடர்பு கொண்டு தன்னாலான முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் தொடர்பு கொண்ட இக்குழுவிற்கு அளித்த பதிலில் தலைவி குறிப்பிட்டுள்ள இரண்டு முக்கியமான விடயங்கள் இவை.

(1) எத்தகைய தீர்வுகள் முன்மொழியப்பட்ட போதிலும், பெரும்பான்மையினருடனும் சேர்ந்தே நாம் செயல்பட வேண்டியுள்ளதால் அவர்களது உரிமைகளைப் பாதிக்காத தீர்வுகளாகவே அவை இருக்க வேண்டும்.

(2) இருபுறம் சிலவிடயங்களை விட்டுக்கொடுப்பதன் மூலமே இப்பிரச்சினையை தீர்க்க முடியுமெனவும், தமிழ் மக்கள் சாத்தியமற்றவைகளை கேட்க மாட்டார்கள் எனவும் நாம் நம்புகிறோம்.

இதைப் பார்க்கிற போது ஒருவருக்கு எழக்கூடிய சாதாரணமான கேள்விகள் சில உண்டு.

(1) பெரும்பான்மையினரின் உரிமை சிறுபான்மையினர் பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் போது எப்படிப் பாதிக்கப்படும்? அப்படியானால் பெரும்பான்மையினர் சிறுபான்மையினரின் சில உரிமைகளை பிடுங்கிவைத்திருப்பதாக தலைவி ஒப்புக்கொள்கிறாரா?

(2) பெரும்பான்மையினர் ஒப்புக்கொள்கிற தமிழ் மக்களுக்கு வழங்கத் தயாராக உள்ள தீர்வு என்ன என்பது அவர்களுடன் சேர்ந்து செல்ல வேண்டியிருக்கும் தலைவிக்கு தெரியுமா? அவை என்ன?

(3) "இருபுறமும்" விட்டுக் கொடுக்கிறது என்றால் தமிழ் மக்கள் விட்டுக் கொடுக்க வேண்டியவை என்ன? மொழியையும், பிரதேசத்தையும் உயிரையுமா?

(4) சாத்தியமற்றதை கேட்க மாட்டார்கள் என்றால் "தலைவி" தர விரும்புபவற்றை மட்டும்தான் கேட்கலாம் என்றுதானே அர்த்தம். சாத்தியமற்றவைகள் என்ன? சுயநிர்ணய உரிமையும் அதிகாரம் பற்றிய போராட்ட உரிமையுமா?

தலைவிக்குத்தான் வெளிச்சம்!

நன்றி - நூலகத்திட்டம்



## சாட்சிகளாகநாம்

யாழ்ப்பாணத்திலுள்ள திருக்குடும்பம், நல்லாயர், அப்போஸ்தலிக் காமல், திருச்சிலுவை ஆகியவற்றைச் சேர்ந்த பெண்கள் ஒன்றியத்தின் நானூறுக்கும் மேற்பட்ட அங்கத்தவர்களின் பிரதிநிதிகளாகிய நாம், யுத்த களமாகியுள்ள யாழ்ப்பாணத்தின் நிகழ்ச்சிகளுக்கு சாட்சிகளாக உள்ளவர்கள் என்ற முறையில் அதன் உண்மை நிலை பற்றிய ஒரு சித்திரத்தை உங்களுக்குத் தர விரும்புகிறோம். யாழ்ப்பாணத்திற்கு வெளியிலிருக்கும் எமது சகோதர சகோதரிகளுக்கு இத்தகைய ஒரு சாட்சியம் மிகவும் பெறுமதி வாய்ந்ததாகுமென நாம் நம்புகிறோம். நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம், புலிகளுக்கும் அரசபடைகளுக்கும் இடையிலானது என்றும் மக்களுக்கு எதிரானது அல்ல என்றும் சொல்லப்பட்ட போதும், உண்மையில் இது மக்களுக்கு எதிராகவே முடுக்கி விடப்பட்டுள்ளது. யாழ் கோட்டையிலிருந்து 1 1/2 கிலோ மீற்றர் தூரத்துள் வசிக்கின்ற, தொடர்ச்சியான பயங்கர அனுபவங்களைப் பெற்றுக் கொண்டிருக்கிற நாமே இதற்கு நேரடிச் சாட்சியாக உள்ளோம்.

## புலப்படாத கொலையாளிகள்

ஜூன்16ல் யாழ்ப்பாணக் கோட்டையைச் சுற்றிக் கோட்டையிலிருந்து வீசப்பட்ட ஷெல் குண்டுகளும் நகர் முழுவதும் துப்பாக்கிக் குண்டுகளைப் பொழிந்த ஹெலிகப்டர்களும் எமக்கு திகிலேற்படுத்தியபோது மூன்று மாத காலமாக நிலவிவந்த ஒப்பீட்டளவிலான அமைதி முடிவுக்கு வந்தது. தெற்கிலே தரை மார்க்கமாக வந்து ஜே.வி.பி. யினருடன் மோதியது போலல்லாமல் வடக்கிலோ ஒன்றில் கோட்டைக்குள் இருந்து கொண்டோ, ஆகாயத்திலிருந்தோ ஊகத்தின் பேரிலும் சந்தேகத்தின் பேரிலும் பல இடங்களையும் தாக்கத் தொடங்கினா. தரைமார்க்கமான தாக்குதல் ஷெல் வடிவில் பலாலி, யாழ் கோட்டை, காரைநகர் ஆகிய முகாம்களிலிருந்து வந்தது. பலாலியிலிருந்து வீசப்படும் ஆட்டிலறி ஷெல்லானது 15 கிமீ தூரத்திலுள்ள குருநகரில் வந்து விழுகிறது. காரைநகரில் நங்கூரமிட்டிருக்கம் Gun boats இலிருந்து ஏவப்படும் ஷெல்கள்,

யாழ்ப்பாணத்திற்கு வெளியே உள்ள அனைத்துத் தீவுகளிலும் விழுகிறது.

## இரவும்பகலும்

பிரதான தாக்குதலான விமானத் தாக்குதல் இரவு பகல் என் றில்லாமல் எல்லா நேரங்களிலும் நடக்கிறது. ஹெலிகப்டர்கள், பொம்பர்கள், "அவ்ரோ" விமானங்கள் இறுதியாக நான்கு எஞ்சின்களை கொண்ட Cargo Plane என்பவற்றை வானில் நாம் காணக்கூடியதாக உள்ளது. அவை எப்போதும் சோடிகளாகவோ அல்லது இன்னும் அதிகமாகவோ வரும். ஆறு முதல் ஒன்பதுவரை விமானங்கள் ஒன்றாக வந்த சந்தர்ப்பங்களும் உண்டு. (யூன் 25, 29, யூலை 16, 22, 30 ஒகஸ்ட் 5,6 ஆகிய திகதிகளை உதாரணமாக சொல்லலாம்.) இரவில் அவற்றை எம்மால் காணமுடியாத போதும் நகரின் இருளுக்குள்ளே ஒளிப்பிழம்பையும் குண்டுகளையும் வீசும்.

## குறிதவறிய இலக்குகள்

ஹெலிகப்டர்கள் அதிவேக துப்பாக்கிச் சன்னங்களைப் பொழிவதுடன் சிறிய பெற்றோல் குண்டுகளையும் போடுகின்றன. பொம்பர்களைப் பொறுத்தளவில் அவற்றிற்கு வழிகாட்டும் ஹெலிகப்டர்களிலிருந்து அறிவுறுத்தல்களும் உத்தரவுகளும் வழங்கப்படுகின்றன. (இவற்றை எம்மால் F.M. அலைவரிசையில், ரேடியோவில் கேட்கக் கூடியதாக உள்ளது) குண்டுகளை போடுமுன் பொம்பர் பிளேன்கள் தாழ்வாக நீந்தும். அப்போது நாம் பங்கருக்குள் ஒழிந்து கொள்வோம். சீனத் தயாரிப்பான Cargo plane கள் கம்பீரமாக வட்டமிட்டபடி 300 Kg நிறையுள்ள குண்டுகளை சாதாரணமாக போடுகின்றன. அத்துடன் இவை ஒரு தடவை வரும் போது 7 முதல் 8 குண்டுகள் வரை தனக்கு விருப்பமானபடி போட்டு விட்டுச் செல்கிறது. அவை போடப்படும் போது -3000 முதல் 3500 மீற்றர் உயரத்திலிருந்து போடப்படுகின்றன- மிகச் சிறிதாக தோன்றிய போதும், விழும் போது அப்பிரதேசம் முழுவதும் செந்நிறப் புகையை கிளப்பியபடி காது செவிடுபடும் சத்தத்துடன் வெடிக்கின்றன. ஒவ்வொரு குண்டும் குறைந்த பட்சம் 10 வீடுகளை நிர்மூலமாக்குகிறது. 20 வீடுகளை பல்வேறு முறைகளில் சேதப்படுத்துகிறது. இது மிகவும் உயர்ந்து பறப்பதுடன் இலக்குகளிலிருந்து பல தூரத்திற்கு அப்பால் தனது குண்டுகளைப் போடுகிறது. முற்றாக இருளில் மூழ்கியிருக்கும் குடாநாட்டின் மீது வெளிச்சமில்லாத விமானத்திலிருந்து நடாத்தப்படும் தாக்குதலே மிகப் பெருமளவு துயரத்தையும் அச்சத்தையும் தருவனவாகும்.

## இழிமையிலும்கீழாக

யூலை 19ம் திகதி பேராயர் இல்லம், சென் பற்றிக்ஸ் கல்லூரி, யாழ் ஆயர் ஆலயம். தொடர்பகம் (OMI வதிவிடம்) ஆகியவை அமைந்துள்ள இடத்தின் மீது ஒரு புதுவடிவிலான "குண்டு" வீசப்பட்டது. இக்குண்டுகள் ஒயில் ரின்கள் மற்றும் பைபர் கான் (fiber can)களில் அடைக் கப்பட்ட அழுக்குகள், மனித கழிவுகள், பழுதான துர்நாற்ற எண்ணைகள் முதலியவை. இவை பயங்கர நோய்களை பரவ வைக்கும் கிருமிகளைக் கொண்டவையா என்ற அச்சம் பரவலாக நிலவுகிறது.

## எவற்றை தாக்குவது எனத் தீர்மானிப்பது யார்?

துரதிர்ஷ்டவசமாக FM அலைவரிசையில் விமானிகள் உரையாடல்களை கேட்கிற போது எவ்வளவு தான்தோன்றித் தனமாக எங்கே குண்டு போடுவதென்பதை அவர்கள் தீர்மானிக்கிறார்கள் என அறிய முடிகிறது. இந்த தீர்மானங்கள் எம்மை திடுக்கிடவைக்கின்றன.

(உ+ம்)

1. ஒன்று மீதியாக உள்ளது. என்ன செய்ய? (எக்கத் தியனவாமே,மொனவாத கறன்னே?) எங்காவது போடு. (கொத்தன ஹரி தாண்ட)

2. ஒரு குண்டு போடப்பட்ட பின்னர் ஒருவர் ஆத்திரத்துடன் அது ஒரு தேவாலயத்தின் மீது விழுந்ததாக சொன்னார். அதற்கு மற்றவர் சொல்கிறார், போட்டாச்சு. இனி ஒன்றும் செய்ய ஏலாது. (யக்கோ. தேவஸ்தானய நேத, கறண்ட தெயக் நா தால இவறாய்)

3. "தாக்குதல் முடிந்தது. தளத்துக்குத் திருப்பு" என்று சொல்லி ஒரு நிமிடத்தில் ஹெலிகப்டர் மக்கள் மீது சன்னங்களைப் பொழியத் தொடங்கும்.

இதிலிருந்து ஒன்று தெரிகிறது. குண்டுகளைப் போடுபவர்கள் மேலதிகாரிகளின் முன்கூட்டிய திட்டத்துடன் வருவதில்லை. விமானிகள் ஒரு குறிப்பிட்ட இலக்கு பற்றிய நோக்குடன் விமானம் ஒட்டுவதும் இல்லை.



## உயிர், சேவை மற்றும் சொத்து அழிவுகள்

ஆயிரக்கணக்கில் அழிக்கப்பட்ட வீடுகள், கடைகள் என்பவற்றிற்குப் புறம்பாக அழிக்கப்பட்ட அத்தியாவசிய சேவைகள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றின் விபரங்களை நாம் தரவிரும்புகிறேம்.

## அத்தியாவசிய சேவைகள்

### வைத்தியசாலைகள்

யாழ் ஆஸ்பத்திரியின் பல வார்ட்டுகள், மானிப்பாய் ஆஸ்பத்திரி, பிலிப் மருத்துவமனை யாழ்ப்பாணம், பல தனியார் வைத்திய நிலையங்கள், மருந்துக் கடைகள், ஆய்வுக் கூடங்கள், சுன்னாகம் மின் நிலையம், யாழ் பஸ் நிலையம், யாழ் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ் மனித முன்னேற்றச் சங்கம் (HUNDEL), யாழ் சந்தை, திருநெல்வேலிச் சந்தை,சாவகச்சேரிச் சந்தை.

### வழிபடுதலங்கள்

1) O.L.R. தேவாலயம் யாழ்ப்பாணம்.
2) சென்ற் ஜேம்ஸ் தேவாலயம் குருநகர்.
3) அற்புத மாதா தேவாலயம் குருநகர்.
4) சென்ற். மேரி கதீட்ரல் தேவாலயம் யாழ்ப்பாணம்
5) ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

### யாழ்ப்பாணத்திற்கு வெளியே

பலாலி, மயிலிட்டி, வசாவிளான், ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் பல தேவாலயங்கள் பாதிக்கப் பட்டுள்ளன.

கன்னியர் மடம் தாக்கப்பட்டது.

யாழ்த் திருக்குடும்பக் கன்னியர் மடம்.(Bienvenu)

### பகுதியாக பாதிக்கப்பட்ட கன்னியர் மடங்கள்.

1. திருக்குடும்ப மாகாண தலைமையகம்.
2. யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம்.
3. திருச் சிலுவை நோயகம் குருநகர்.
4. வயோதிபர் இல்லம், கொழும்புத்துறை.

### யாழ்ப்பாணத்திற்கு வெளியே

அப்போஸ்தலிக் கார்மேல் கன்னியர் மடம், அடம்பன்.
புனித ஜோசப் கன்னியர் மடம், மயிலிட்டி.
திருக்குடும்ப கன்னியர் மடங்கள். மயிலிட்டி, ஊர்காவற்றை, பரப்பாங்கண்டல், நானாட்டான், உருத்திரபுரம்.
நல்லாயன் மடம், மாங்குளம்.
பாவிக்கப்பட முடியாத வகையில் கைவிடப்பட்டவை
திருக்குடும்ப கன்னியர் மடம், திருநெல்வேலி.

### தாக்கப்பட்ட அகதி முகாம்கள்

புனித ஜோசப் மகாவித்தியாலயம், கொழும்புத்துறை.
புனித அந்தோனியார் மகளிர் மகாவித்தியாலயம். பாஷையூர்.
புனித பற்றிக்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம்.

### நிர்மூலமாக்கப்பட்ட வங்கிகள்

தேசிய சேமிப்பு வங்கி, பல மக்கள் வங்கி கிளைகள்.

## எமது தலைவிதியும் வாழ்வும்

இந்த யுத்தத்தின் பயனாக நாம் மனோரீதியாக, சரீரரீதியாக, பொருளாதார ரீதியாக, ஆத்ம ரீதியாகப் பாதிக்கப்பட்டுளோம். எமது இரவுகள் இருள் மயமாக இருப்பது மின்சாரம் இல்லாததோ அல்லது இருந்த ஒரேயொரு சுன்னாகம் மின்நிலையமும் தகர்க்கப்பட்டதோ காரணமாக மட்டுமல்ல, ஒரு மின்னுகிற வெளிச்சத்திலேனும் நாம் குண்டுகளுக்கு இலக்காகி விடுவோமோ என்ற அச்சத்திலுமேயாகும். சகிக்க முடியாத அசுவாத்திய நிலையிலும் நாம் எமது நேரத்தில் பெருமளவை பங்கருக்குள்ளும், மதவுகளுக்குள்ளும், பாலங்களின் கீழும் கழிக்கிறோம். பலர் தமது வீடுகளின் கூரைகளை இழந்துள்ளார்கள். மழை நாட்களில் வீடுகளும் பங்கர்களும் வெள்ளத்துள் மூழ்குகின்றன. இயலாத, பங்கருக்குள் வரமுடியாத வயோதிபர்கள் பங்கருக்குள் இருப்பவர்களது மனதில் பெரும் அச்சத்தையும் கழிவிரக்கத்தையும் ஊட்டுகின்றனர். தமது வளவுகளிலே பங்கர்கள் இருந்த போதும் பரவலாக நடக்கும் தாக்குதலால் முகாம் விட்டு முகாம் மாற வேண்டியிருப்பதால் அவற்றை பாவிக்கவும் முடிவதில்லை. பலர் அகதி முகாமிலேயே குண்டுகட்குப் பலியாகி உள்ளனர். எந்த இடமும் எந்த நேரமும் எமக்கு பாதுகாப்பாக கருத முடியாது. பட்டினி பலரை தற்கொலைக்கு தூண்டுகிறது. சிலர் ஏற்கனவே தற்கொலை செய்தும் விட்டார்கள் சுகயீனமுற்றவர்கள், காயமுற்றவர்கள் ஆகியோருக்கு வைத்தியசாலையும் கிடையாது. போக்குவரத்து வசதி இல்லை. மருந்துகள் கிடையாது. சுருக்கமாக சொன்னால் நாம் எமது அடிப்படை தேவைகளான உணவு, உறைவிடம், பாதுகாப்பு என்பவற்றிக்கான தேவையை எம்மால் நிறைவு செய்ய முடியவில்லை. பல கன்னியர் மடங்களை ஒன்றில் அவை உடைக்கப்பட்டதாலோ அல்லது அங்கிருப்பது பாதுகாப்பற்ற அச்சம் தருகின்ற ஒன்றாகவோ இருப்பதாலோ நாம் மூடி விட நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

ஒப்பீட்டளவில் பாதுகாப்பான இடங்களுக்குச் சகோதரிகள் மாற்றப்பட்டுள்ளார்கள்.

சகோதரிகள் தமது நாளாந்த பிரார்த்தனையை கூட செய்ய முடியவில்லை. சுற்றி வரப் பார்ப்பதும் அவற்றை தெரிவிப்பதுமே இன்றைய மிக உயர்ந்த வழிபாடாக உள்ளது எமக்கு.

இத்தகைய நிலைமையின் கீழான எமது வாழ்க்கை உண்மையில் அற்புதம்தான். அமைதியாக கவலைப்படுவதுதான் எமது நாளாந்த அனுபவமாக இருந்து வந்தது. ஆனால் இப்போது நாம் எமது எல்லையை அடைந்து விட்டதால் சகோதரிகளாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்ள நாம் பலத்து அழுவது தேவையாக உள்ளது. இந்த அழுகை வெறும் காட்டுக்குள் அழுத அழுகையாக இல்லாமல் உங்களது உள்ளத்தில் எம் சார்பாக எதிரொலித்து ஏதாவது நடைமுறைக்கான சிந்தனைகளை தோற்றுவிக்கும் என நம்புகிறோம்.




யாழ்குடாநாட்டின் பல்வேறு கன்னியர் மடங்களைச் சேர்ந்த சகோதரிகள், கிறிஸ்ரபெல், ரீனாராசையா, எம். வசந்தா, தெரேஸா, ஆனந்தபிள்ளை, பற்றீசியா, ராஜேஸ்வரி, அந்தோனியா மற்றும் சகோதரி மேரியா ஆகியோர் கையெழுத்திட்டு அனுப்பி வைத்திருக்கும்கடிதம்இது.

நன்றி - நூலகத்திட்டம்



# முஸ்லிம் இணைப்படு கொள்கை

ஓகஸ்ட் மாத முஸ்லிம் படுகொலைகள் பற்றி முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் சே.த. இல்யாஸ் தீனையும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிப் பா.உ. மாவை சேனாதிராஜாவையும் சரிநிகர் பேட்டி கண்டது. பேட்டித் தொகுப்பு பின்வருமாறு:



சே.த. இல்யாஸ் தீன்.

மாவை. சேனாதிராஜா.

**அண்மையில் கிழக்கில் நடைபெற்ற முஸ்லிம்கள் மீதான தாக்குதலைப் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன? இதைத் தொடர்ந்து நடைபெற்ற தமிழ் மக்கள் மீதான தாக்குதலைப்பற்றிஎன்ன கருதுகிறீர்கள்? இருபுறமும் இதுவரை ஏற்பட்ட பாதிப்புகள் எத்தகையவை? இவற்றை நீண்ட கால நோக்கில் தீர்க்க என்ன செய்யலாம்? இவையனைத்துக்கும் பொறுப்பாக அல்லது செய்ததாக யாரைக் கருதுகிறீர்கள்? இவற்றில் அரச படைகளின் பங்கு பற்றி என்ன கருதுகிறீர்கள்?**

மாவை:

இது நடந்திருக்கவே கூடாது. எந்தவொரு நபர் மீதோ அல்லது ஒரு இனக்குழு மீதோ இன்னுமொருவர் அல்லது வேறொரு இனக் குழுவினர் ஆதிக்கம் செலுத்தும் நோக்கம் யாருக்குமே இருக்க முடியாது. முஸ்லிம்களில் கிட்டத்தட்ட 2/3 பங்கினர் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் வாழ்ந்தாலும் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக அம்பாறை மாவட்டம் அவர்களுக்கு ஒரு தாயகமாகவும் பாதுகாப்பு அரணாகவுமிருப்பதை யாரும் மறுக்க முடியாது.

தமிழ் மொழி பேசுபவர்களாக இருந்த போதிலும் முஸ்லிம் மக்கள் மதத்தினாலும், கலாசாரத்தினாலும் ஒரு தேசிய இனத்திற்குரிய வளர்ச்சியைக் கொண்டிருப்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில் முஸ்லிம் மக்கள் தங்களைத் தாங்களே ஆளக்கூடிய அரசியல் வடிவமொன்றினால் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்.

இன்று முஸ்லிம் மக்கள் மீது தாக்குதல் தொடுத்தவர்கள், முஸ்லிம் மக்களைக் கொலை செய்தவர்கள், அதற்குப் பதிலாகத் தமிழர்களைக் கொலை செய்தவர்கள் யார் என்பதை திட்டவட்டமாக எம்மால் கூறமுடியவில்லை. இருபகுதியினரிலும் தவறாக வழி நடத்தப்படும் சக்திகள் இன்றைய நிலைமைகளுக்குக் காரணமாக இருக்கக்கூடும். அவர்களது அரசியல் இலக்கு என்ன என்பதும் தெரியவில்லை.

இக்கொலைகளையும் முஸ்லிம்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் மோதல்களையும் பயன்படுத்திக் கொண்டு முஸ்லிம் மக்களைத் தமிழ் மக்களிடமிருந்து பிரித்துவிடவும், வடக்கு-கிழக்கு மாகாணம் தமிழர் தாயகம் என்ற அடிப்படைக் கோட்பாட்டிலிருந்து கிழக்கு மாநிலத் தமிழ் மக்களை வடக்கிலிருந்து பிரித்துவிடவும் கங்கணம் கட்டி நிற்கின்ற அரசியல் சக்திகட்கு முஸ்லிம் மக்களை எந்த வகையிலும் பகடைக்காய்களாக்க இடமளிக்கக்கூடாது.

எம்மைப் பொறுத்தளவில் வடக்கு கிழக்கு இணைந்த மாநில ஆட்சி ஒன்றில் முஸ்லிம் மக்கள் சுயாட்சி அதிகாரத்துடன் தம்மைத்தாமே ஆளுபவர்களாகவும் தமிழ் மக்களுடன் இணைந்தும் வாழலாம் என்ற கருத்தைக் கொண்டுள்ளோம்.

அரசாங்கம் சமூகங்களுக்கிடையிலான கலவரங்களை நிறுத்த போதிய முன்னேற்பாடு எடுத்திருக்க வேண்டும் என்பது எமது கருத்து. பதிலாக இனங்களுக்கிடையில் ஏற்பட்டிருந்த தற்காலிக பகைமையைப் பாவித்து வடக்கு கிழக்கு மாகாணம் தமிழர்களின் தாயகம் என்ற கோட்பாட்டையே இல்லாமற் செய்துவிட வேண்டும் என முயற்சிக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

இல்யாஸ் தீன்:

வடக்கு, கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் மீது ஜூன் 11, 1990க்குப் பின்னர் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் மனிதாபிமானம் அற்றவையும், காட்டுமிராண்டித் தனமானவையுமாகும். வடக்கு கிழக்கு பிரதேசத்து தமிழ் பேசும் மக்களின் மொத்த நலனையும், நிரந்தர அமைதியையும், பிரதேச ஒருமைப்பாட்டையும் கருத்தில் கொண்ட எந்த தமிழர் இயக்கமும் அறவே செய்திருக்கக் கூடாதவையுமாகும்.

இதற்கான பொறுப்பின் அதிபெரும் பங்கை விடுதலைப் புலிகளே ஏற்க வேண்டும்.

அப்பாவி முஸ்லிம் பொது மக்கள் வயல்களிலும், வியாபார ஸ்தலங்களிலும், வணக்க வழிபாட்டு இடங்களிலும் நூற்றுக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டதன் எதிர் விளைவாகவே அப்பாவித் தமிழ் மக்கள் மீதான படுகொலைகள் இழைக்கப்பட்டிருக்க வேண்டும். இக்கொலைகள் வஞ்சம் தீர்க்கும் முகமாகவோ அல்லது அரசியல் லாபம் கருதிய சக்திகள் தொடர்புபட்டோ இருப்பினும் கூட இக்கொலைகள் பகிரங்கமாகவும், வன்மையாகவும் கண்டிக்கப்படவேண்டியவை.

முஸ்லிம்கள் தரப்பில் கிடைத்துள்ள உத்தியோகப்பற்றற்ற தகவல்களின்படி ஜூன் 11, 1990 க்குப் பின்னர் ஆயிரத்துக்கும் அதிகமான முஸ்லிம்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் விடுதலைப் புலிகளினால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். பல கோடி ரூபாய் பெறுமதியான நிதி வடக்கு கிழக்கு முஸ்லிம்களிடமிருந்து விடுதலைப் புலிகளால் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது. முஸ்லிம்களின் விவசாய நிலங்கள் அறுவடை செய்ய முடியாமல் இருப்பதனால் வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் முஸ்லிம்கள் பலகோடி ரூபா நஷ்டத்தை அடைந்துள்ளனர்.

தமிழர்களைப் பொறுத்த வரையில் இதுவரை பலியாகியுள்ள தமிழர்களின் தொகையைத் திட்ட வட்டமாகக் கூறமுடியாத நிலையே உள்ளது என்றாலும் அத்தொகை நிச்சயமாக ஆயிரக்கணக்கில் தான் இருக்க வேண்டும் என்றே எண்ண முடிகிறது.

முஸ்லிம்களைப் போல் அப்பாவிப் பொதுத்தமிழ் மக்களும் பாரிய கஷ்டங்களையும், இழப்புகளையும் சந்தித்துள்ளனர். கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில், தமிழ்-முஸ்லிம் உறவில ஏறபடட நெருக்கடியும் விரிசலும் இரு சமூகங்களும் ஒன்றையொன்று நம்பிச் செயற்பட முடியாத கட்டத்தை எட்டியுள்ளன.

முஸ்லிம்களையும் தமிழர்களையும் கிழக்கில் பகைப்படுத்த வேண்டுமென்பதில் அக்கறையாக ஒருசாராரும், இவர்களை ஒற்றுமைப் படுத்த வேண்டுமென்பதில் இன்னொரு சாராரும் கருத்தாய் இருந்தனர். தமிழ்-முஸ்லிம் நேச சக்திகள் தமிழர்களும் முஸ்லிம்களும் கிழக்கில் என்றும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்றே தொழிற்பட்டு வந்தன.

முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்த வரையில் மிக அண்மைக் காலம் வரை வடக்கு கிழக்குப் பிரதேசங்கள் இணைக்கப்பட்டிருப்பதனையும், அந்த இணைப்புக்குள் முஸ்லிம்களுக்கென பொருத்தமான சுயாட்சி வழங்கப் படுவதனையுமே வற்புறுத்தி வந்துள்ளது. இதனை சகல தமிழ் அரசியல் கட்சிகளும் குழுக்களும் அறிவர். இதன் மூலம் முஸ்லிம் காங்கிரஸ் தமிழ்-முஸ்லிம் உறவை, பரஸ்பர ஐக்கியத்தை, புரிந்துணர்வை வற்புறுத்தி வந்தது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இதே போலவே ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்ட பழைய தமிழ் தீவிரவாதக் கட்சிகளிற் சிலவும் தமிழ்-முஸ்லிம் ஐக்கியத்தை வட கிழக்கில் பேணிப் பாதுகாக்கும் இலட்சியத்தை கொள்கை அளவில் கொண்டிருந்தன. நடைமுறையில் இது அடிக்கடி பாதிக்கப்பட்டாலும் பழையபடி தமிழ்-முஸ்லிம் உறவைக் கட்டியெழுப்பவே பொதுவான தமிழ்முஸ்லிம் தலைவர்களின் விருப்பம் இருந்தது.

விடுதலைப் புலிகள் கூட முஸ்லிம்களைத் தமிழர்களிடமிருந்து பிரிக்க முடியாத அங்கமெனவும் இஸ்லாமியத் தமிழர் எனவும் சொல்லி வந்தனர். ஆனால் அவர்களின் அண்மைக்கால நடவடிக்கைகளின், போக்கில் பெரும் மாற்றத்தையே காணக்கூடியதாக இருக்கிறது.

எல்லாரும் சொல்லிக்கொள்கிற மாதிரி, வடக்கிலிருந்து கிழக்கைப் பிரிக்க சிங்களப் பேரினவாத அரசியல் வாதிகளும், அவர்களது ஏவல் நாய்களுமே தமிழ்-முஸ்லிம் பகையை வளர்க்கின்றன என்றே எடுத்துக்கொண்டாலும் காலத்துக்குக்காலம் தமிழ்த் தீவிரவாதக் குழுக்களினதும், விடுதலைப் புலிகளினதும் முஸ்லிம் விரோத நடவடிக்கைகள் மேற் சொன்னவற்றிற்குப் பொறுப்பாக அமையவில்லை என்று சொல்ல முடியாது.

மேலும் இன்றுள்ள சூழ்நிலையில் விரக்தியடைந்த முஸ்லிம் இளைஞர்களும் தமிழ், முஸ்லிம் ஒற்றுமையைப் பற்றி முன்போல யோசித்துச் செயற்படுவதில் நம்பிக்கை இழந்துள்ளனர்.

1985 ஏபரல தமிழ்-முஸ்லிம் கலவரத்தில் அரச படைகள் தமிழ் மக்களுக்குப் பாதகமாக நடந்து கொண்டன. முஸ்லிம்கள் மீது தமிழர் இயக்கங்களின் தாக்குதல்களுக்கு முஸ்லிம்கள் வஞ்சம் தீர்த்துக் கொளவதற்கு அரச படைகள் அன்று சிறிதாயினும் துணைநின்றன.

இவ்வாறு அரச படைகள் அன்று துணைநின்றதால் அவை முஸ்லிம் சமுகத்தின் மேல் கொண்டிருந்த பிரியம் தான் காரணம் என்று யாரும் சொல்ல மாட்டார்கள். முஸ்லிம்களின் வஞ்ச உணர்வைத் தமக்குச்சாதகமாகவே அவை பயன்படுத்தியதாகத் தான் சொல்ல முடியும்.

ஆனால் இன்று அவ்வாறான ஒரு நிலைமை இல்லை. அரச படைகள் கூடிய நிதானத்தோடும், பொறுப்புணர்வோடும் செயல்படுவதாகத் தெரிகிறது. சில்லறைச் சம்பவங்களில் அரசபடையின் விசுவாசத்தைச் சந்தேகிக்கக் கூடியதாக இருந்தாலும், பெரிய அளவில் அவை கூடிய நிதானத்தோடு செயல்படுவதாகவே தெரிகிறது. வடக்கைப் பற்றிச் சரியாகச் சொல்ல முடியாவிட்டாலும், கிழக்கில் நிலைமை இவ்வாறு தான் உள்ளது.

விடுதலைப் புலிகளின் கண்ணிவெடி, எதிர் பாராத தாக்குதல்களால் சீற்றமடையும் அரச படை சில கணங்களுக்காவது நிதானத்தை இழந்திருப்பது எதிர் பார்க்கக் கூடிய விஷயம் தான்.

இவற்றை கிழக்கில் நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு உள்ள ஒரே வழி முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்குமென கிழக்கில் தனியான அதிகாரப் பரவலாக்க அலகுகளை ஏற்படுத்தி தம் பிரதேநங்களின் சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு என்பவற்றைக் கவனிக்க தமிழர்களையே ஈடுபடுத்துவதும், அதன் மூலம் தமிழ்-முஸ்லிம் ஐக்கியத்தைப் பேண சகல துறைகளிலும் முயற்சி எடுப்பதுமாகும்.

**முஸ்லிம்- தமிழ் மக்கள் மத்தியில் கலவரம் நடந்தது இது முதல் தடவையல்ல. இக் கலவரங்கள் அடிக்கடி நடப்பதற்கான பின்னணியாக எதைக் கருதுகிறீர்கள்? தமிழ்-சிங்கள கலவரங்களையும் இதையும் ஒப்பிடலாமா? அப்படியாயின் எப்படி? அல்லவாயின்ஏன்?**

மாவை:

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக ஆயுதக் குழுக்கள் வளர்ச்சியடைந்த காலகட்டங்களில் தான் முஸ்லிம்களுக்கும், தமிழர்கட்கும் மத்தியில் இவ்வாறான கலவரங்கள் இடம்பெற்றுள்ளதை அவதானிக்கலாம்.( அதற்கு முன் இருக்கவில்லை). ஆயுதம் தாங்கிய இயக்கங்களின் தவறான வழிநடத்தல் தான் இப்படியான கலவரங்கட்கு காரணம். யார் வட கிழக்கு மக்களின் ஏகபோக ஆட்சியாளர் என்பதன் போட்டா போட்டி இதன் பின்னணியில் இருக்கிறது. இதன் விளைவாக தமிழர்களிடமிருந்து முஸ்லிமகளும், முஸ்லிம்களிட மிருந்து தமிழர்களும் பாதுகாக்கப் படுவதற்கு ஆயுதம் ஏந்த வேண்டும் என்ற துர்ப்பாக்கியமான நிலைமை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இது முஸ்லிம்களுக்கும், தமிழர்களுக்கும் தங்களுக்கிடையே மோதி அழிவை ஏற்படுத்தவே உதவும். அதற்குப் பதிலாக இரண்டு சமூகங்களுக்கும் தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்ளக்கூடிய சட்ட பூர்வமான அதிகாரப் பரவலாக்கம் ஒன்றின் மூலம் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும்.

முஸ்லிம்களும் தமிழ் மக்களும் தமக்கிடையில் அரசியலதிகாரத்தை சட்டம், ஒழுங்கு, நிலப்பங்கீடு கல்வி, வேலை வாய்ப்பு, ஆட்சிப் பிரதிநிதித்துவம் என்பவைகளில் பகிர்ந்து இணக்கத்துடன்வாழுவதற்காக பேச்சு வார்த்தை மூலம் இணக்கத்திற்கு வரமுடியும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

தமிழ்-சிங்கள கலவரங்களுடன் முஸ்லிம்-தமிழ் கலவரங்களை நான் ஒப்பிட முயற்சிக்கவில்லை. தமிழ் மக்கள் மத்தியிலும், முஸ்லிம் மக்கள் மத்தியிலும் அரசியலதிகாரத்தைப் பகிர்ந்து தம்மைத் தாமே ஆளக்கூடிய இணக்கம் இருந்து வந்துள்ளது. ஆனால் சிங்கள ஆட்சியாளர்கள் வரலாற்றில் தமிழ் மக்களுடனும், முஸ்லிம் மக்களுடனும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டு (சிறுபான்மைத்) தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க மறுத்து அரச படைகளின் மூலம் இனங்களை அழித்துவிடுகின்ற நடவடிக்கையை எடுத்துவருகின்றது என்றே குறிப்பிட வேண்டும்.

இல்யாஸ் தீன்

தமிழ்-முஸ்லிம் கலவரங்கள் அடிக்கடி நடப்பதற்கான பின்னணி என்று திட்டவட்டமான ஒன்று இருப்பதாகத் தெரியவில்லை. வடக்கு-கிழக்கின் தற்காலிக இணைப்பும், மக்களபிப்பிராய வாக்கெடுப்பு யோசனையும் 1987 ஜூலை 29இல் இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தத்தால் முன்வைக்கப் படுவதற்கு முன்னரேயே 1985ல் வட-கிழக்கில் தமிழ்-முஸ்லிம் கலவரங்கள் தலை தூக்கின.

கிழக்கை வடக்கிலிருந்து நிரந்தரமாகப் பிரிப்பதற்காக கிழக்கு முஸ்லிம்களை இலங்கை அரசாங்கம் பகடையாகப் பாவிக்கிறது என்ற குற்றச்சாட்டு 1987க்குப் பின்னர் தான் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் அதற்கு 2 வருடங்களுக்கு முன்னரேயே தமிழ்-முஸ்லிம் கலவரங்கள் ஏற்படத் தொடங்கியதை நாம் மறந்து விடக் கூடாது.

80 குப் பிறகு வேகமாக வளர்ந்த தமிழ் தீவிரவாத இயக்கங்களின் சிறுபான்மைச் சமுகங்களுக்கான உரிமைப் போராட்டம் முஸ்லிம்களையும் சமமாகக் கவர்ந்த ஒரு விஷயமாகும். அதுகாலவரை இருந்துவந்த சந்தர்ப்பவாத முஸ்லிம் தலைமைத்துவமும், கொழும்பு வர்த்தக முஸ்லிம் தலைமைத்துவமும் முஸ்லிம்களின் உரிமைகளை சலுகைகளாக மன்றாடிப் பெறுமளவிலேயே அரசியல் அறிவு பெற்றிருந்தன.

தமிழ்த் தீவிரவாதப் போக்கில் கவரப்பட்டு முஸ்லிம் இளைஞர்களும் அக் குழுக்களில் சேர்ந்தனர். பரவலாக முஸ்லிம்கள் தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கு மானசீகமான அனுதாபிகளாகவோ, ஆதரவாளர்களாகவோ இருந்து வந்தனர்.

நாளடைவில் தமிழ் தீவிரவாதக் குழுக்களின் நட

நன்றி - நூலகத்திட்டம்



வடிக்கைகள் முஸ்லிமகளை வெகுவாகப் பாதிக்கத் தொடங்கியது. தமிழர் இயக்கங்களில் இருந்த முஸ்லிம் இளைஞர்கள் பாரபட்ச நடவடிக்கைகளால் அதிருப்தியுற்றிருந்தனர்.

1987ல் இந்திய சமாதானப் படையின் வருகையின் பின்னரும் இந்தியப் படையின் பாரபட்ச நடவடிக்கைகளால் முஸ்லிம்கள் கசப்படைந்தனர். இதன் எதிரொலி தமிழ் விரோத உணர்வையே ஊட்டி வளர்த்தது.

1990ல் இந்தியப் படை முற்றாக விலகியதும் விடுதலைப் புலிகளின் அத்துமீறல்களும், கொடுமைகளும் முஸ்லிம்-தமிழ் ஒற்றுமையைச் சீர் செய்ய முடியாத அளவில் சீணிக்கச் செய்தது. இந்தக் கால கட்டத்தில் இலங்கை அரசாங்கம் வட-கிழக்கு இணைப்பை அறுத்துவிட முஸ்லிம்-தமிழ் உறவை பல தந்திரோபாயங்களால் முடமாக்கியதாகக் கொள்ள முடியும்.

சிங்களப் பேரினவாதம் தமிழர்களை ஒடுக்க முயன்றதைப் போலவே தமிழ்ப் பேரினவாதம் முஸ்லிம்களை ஒடுக்க முயற்சிப்பதனால் இதனை தமிழ்-சிங்களக் கலவரங்களோடு ஒப்பிடுவதில் தவறொன்றுமில்லை.

**முஸ்லிம்கள் தாம் மதத்தால் இஸ்லாமியர் ஆகவும், தமிழ் மொழி பேசுபவர்களாகவும் இருந்த போதிலும், தம்மை இனத்தால் தமிழரல்ல எனக் கூறும் கருத்தையொட்டி ஏதாவது சொல்ல முடியுமா? இக்கருத்து வலுவடைந்து வருவதும், இது எதிர்காலததில் ஏற்படுத்தப் போகும் அரசியல் மாற்றம் குறித்தும் என்ன கருதுகிறீர்கள்?**

**மானவ:**

இக்கருத்தையொட்டி எம்மத்தியில் பெரிய விவாதம் எதுவும் இருக்கவில்லை. 1956ம் ஆண்டிலேயே தமிழரசுக்கட்சி முஸ்லிம் மக்களுடைய சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்திருக்கிறது. முஸ்லிம்கள் ஒரு தேசிய இன வளர்ச்சியைப் பெற்று சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தமது எதிர்காலத்தை தாமே தீர்மானிக்க வேண்டுமென்று முடிவு செய்தால் அதனை நாம் ஆதரிப்போம்.

முஸ்லிம் மக்களும் எதிர்காலத்தில் அரசியலரங்கில் சம உரிமைகளும், சம பலமும் பெறுவதற்கு உரித்தாவது, எதிர்காலத்தில் அவர்களுடைய சமூக வளர்ச்சிக்கும், அரசியலிலும் சமமான வலுவை அதனடிப்படையிலான மாற்றங்களை நிச்சயம் ஏற்படுத்தும் என நம்புகிறேன். கிழக்கு மாகாணத்தில் அரசியல் தலைமையின் வளர்ச்சி ஏனைய பகுதி முஸ்லிம் மக்களுக்கும் புதிய அரசியல் பலத்தைக் கொடுக்கும்.

**இஸ்ஸதீன்:**

இலங்கை வாழ் முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் அவர்களை இனத்தால் இன்ன சாதியினர் எனக் குறிப்பிட்டு திட்டவட்டமாக எதுவும் கூறமுடியாது. இது தொடர்பாக இதுவரை செய்யப்பட்டுள்ள ஆய்வுகள் இலங்கை முஸ்லிம்கள் அனைவரையும் ஒரே இனக் குடையின் கீழ் கொண்டுவரலில்லை.

இலங்கை முஸ்லிம்களில் கலப்பற்ற, மேமன்களும், மலாயர்களும் இருக்கின்றனர். அராபிய வழித் தோன்றல்களும் இருக்கின்றனர். அதே போல திராவிடக் கலப்புள்ள முஸ்லிம்களும் இலங்கையில் இருப்பதாகவே கொள்ள முடியும்.

முஸ்லிம்கள் நாடு பூராய் தமிழ் மொழியைப் பேசுவது அவர்கள் அனைவரும் தென்னிந்திய தமிழ் திராவிடர்களின் வழித்தோன்றல்கள் என்பதற்கு ஆதாரமாகாது.

இன்றுள்ள சூழ்நிலையில் முஸ்லிம்களின் அடையாளம் அவர்கள் பேசும் மொழியினையோ, அல்லது அவர்களது இனக் கலப்பு அம்சத்தையோ பற்றிய பிரச்சினை அல்ல. அவர்களது அடையாளப் பண்பு இன்று முழுக்க முழுக்க அவர்களது மத சம்பந்தமானதாக மாறி விட்டது.

ஏனெனில் வடக்கு கிழக்கில் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட மூன்று மத சமூகங்கள் உண்டு. தமிழ் இந்துக்கள், தமிழ் கிறிஸ்தவர்கள், தமிழ் முஸ்லிம்கள்.

ஆனால் ஒரே மொழியைப் பேசிய போதும் தமிழ் இந்துக்களும் தமிழ் கிறிஸ்தவர்களும் ஒன்றாகவும் தமிழ் முஸ்லிம்கள் தனியாகவும் அடையாளம் காணப்படுவதனாலேயே இந்தக் கலவரங்கள் சாத்தியமாகின்றன. எனவே வட-கிழக்கைப் பொறுத்த வரையில் பொதுவான ஒரு மொழி, பிரச்சினையைத் தீர்க்கப் போதுமான தொடர்பல்ல.

வட- கிழக்கிலுள்ள முஸ்லிம்களின் அரசியல் தனித்துவத்தை அங்கீகரித்து, அதிகாரப் பரவலாக்கத்தின் கீழ் அவர்களுக்கென தனியான அலகொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்தி சமரசம் செய்துகொள்வதன் மூலமே நிரந்தர அமைதியை உறுதிப் படுத்த முடியும்.

**வடக்கு-கிழக்கு இணைப்பும் முஸ்லிம்-தமிழ் மக்களிடையேயான கலவரமும் ஏதோ ஒரு வகையில் பிணைக்கப் பட்டுள்ளதாக கூறினால் அது சரியா? இந்த இணைப்புக் குறித்து முஸ்லிம் மக்கள் அஞ்ச வேண்டியிருப்பது நியாயமானதா? இது இரு சாராருக்கும் நன்மை தருமா? அல்லது தமிழ் மக்களுக்கு மட்டுமா? எப்படி?**

**மானவ:**

முஸ்லிம் மக்கள் வடக்கு-கிழக்கு இணைந்த ஒரு தாயகத்தை எதிர்க்கிறார்கள் என்று நான் நம்பவில்லை. இன்று ஏற்பட்டுள்ள கலவரம் ஒரு அரசியல் இலட்சியத்தைக் கொண்டதாக இருக்குமென்றும் நான் கருதவில்லை. முஸ்லிம் மக்கள் ஆகக் கூடுதலாக முஸ்லிம் மாகாணம் ஒன்றில் தாம் ஆளப்பட வேண்டும் என்றே கருத்துக் கொண்டிருக்கிறார்கள். இது வடக்கு-கிழக்கு இணைந்த தாயகத்திற்கு விரோதமாக இல்லாத ஒரு இணைப்பை ஏற்படுத்த முடியும் என்ற கருத்தும் அவர்களிடம் இருக்கிறது. ஆனபடியால் இன்றைய கலவரங்கள் ஒரு அரசியல் இலட்சியத்தைக் கொண்டதாக இருந்ததாக கொள்ளப்படவில்லை.

முஸ்லிம்கள் தனியான ஒரு முஸ்லிம் மாகாணத்தில் தம்மை ஆள நினைப்பதாயின் அவர்களுடைய விவசாய நிலங்கள் தமிழ் மக்களிடையே சிதறுண்டுக்கின்றன. அது போலவே முஸ்லிம் மக்களும் புவியியல் ரீதியான தொடர்ச்சியற்ற குழுமங்களாக இருக்கிறார்கள். இதினால் சட்டம் ஒழுங்கும், நிர்வாக நடைமுறைகளும் குழப்பத்திற்கு உள்ளாகும் என்ற ஒரு கருத்து இருக்கிறது. தமிழ் இயக்கங்களைப் பொறுத்த வரையில் இத்தகைய குழப்பங்கள் ஏற்படா வண்ணம் எப்படி முஸ்லிம்களுடைய உரிமைகள், பாதுகாப்பு என்பவைகளை உறுதிப்படுத்த முடியும் என்று பேச்சுவார்த்தை நடத்தி தீர்மானிப்பதற்கும் ஆயத்தமாக இருக்கின்றன. அத்துடன் ஒன்றுபட்ட வடக்கு-கிழக்கு மாநில தாயகத்தில் வாழலாம் என்ற நம்பிக்கையுடனும் இருக்கின்றன

தங்களைத் தாங்களே ஆளக்கூடிய வடக்கு- கிழக்கு இணைந்த தாயகத்தில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் வாழுவதே நன்மை தரும் என நான் நம்புகிறேன்.

**இஸ்ஸதீன்:**

வட-கிழக்கு இணைப்புக்கும் கடந்தகால தமிழ் முஸ்லிம் கலவரத்துக்கும் ஏதும் தொடர்பில்லை என்பதை முன்னரே கூறினேன்.

ஆனால் இன்று வட-கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்கள் அஞ்சவேண்டிய நிலைமை ஆதார பூர்வமானதாகும். வட-கிழக்கின் ஈ.பி.ஆர்.எல்.எப் + ஈ.என்.டி.எல்.எப் ஆட்சி முஸ்லிம்களைப் பெரிதும் அதிருப்திப் படுத்திய ஒன்றாகும்.

அதன் பின்னர் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அதனை மேலும் பயங்கரப்படுத்தியுள்ளது. இதனால் வட-கிழக்கு இணைப்பைப் பற்றி ஒரு முஸ்லிம் சிறுவனும் அஞ்சவேண்டியது முழுக்க முழுக்க நியாயமானதே.

வட-கிழக்கு இணைப்பு அவசியமற்ற ஒன்று. அதிகாரப் பரவலாக்கத்தின் கீழ் வடக்குக்குத் தனியான ஒரு வட மாகாண சபையும், கிழக்கிலுள்ள தமிழர் பிரதேசங்களுக்குத் தனியான ஒரு கிழக்கு மாகாண சபையும், வடக்கு-கிழக்கிலுள்ள முஸ்லிம் பிரதேசங்கள் அனைத்தையும் பொருத்தமான முறையில் உப அரசாங்க அதிபர்கள் பிரிவுகளாக்கி. அவற்றை ஒரே அரசியல், நிர்வாக இயந்திரத்தின் கீழ் இணைத்து முஸ்லிம்களுக்கென ஒரு தனியான தென்-கிழக்கு மாகாண சபையும் அமைக்கபடுவதே வடக்கு கிழக்கில் நிரந்தர அமைதியையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும். இவ்வாறு செய்யும் போது வடக்கு கிழக்கிலுள்ள சிங்களப் பிரதேசங்களை 1971ம் ஆண்டின் இன விகிதாசாரத்துக்கு அமைய நிலப் பங்கீடு செய்து கழித்து சிங்கள மாகாணங்களோடு இணைத்துவிட வேண்டும். இதன் மூலமே சிங்களக் குடியேற்றத்தின் அச்சுறுத்தலைத் தவிர்க்க முடியும்.

**பதியுதீன் முஃமத் தலைமையிலான முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணிக்கும் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட ஒப்பந்தம் பற்றி என்ன கருதுகிறீர்கள்?**

**மானவ:**

அவர்களுக்கிடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவர்கள் இப்பொழுதும் இருக்கிறார்களா என என்னால் குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் அதிகாரத்தைப் பகிர்ந்து ஒன்றுபட்ட வடக்கு-கிழக்கு இணைந்த தாயகத்தில் ஒற்றுமையாக வாழ முடியும் என்ற அடிப்படையில் தான் அந்த ஒப்பந்தம் அமைந்ததாக நான் நம்புகிறேன்.


இந்த ஒப்பந்தம் ஏற்பட முன்னர் மு.ஐ.வி. முன்னணி சென்னையில் த.வி.கூட்டணியுடனும் இதே அளவிலான ஒரு ஒப்பந்தத்தைச் செய்திருந்தது. அதற்குப் பின்னர் 1987ம் ஆண்டு ஏற்பட்ட இலங்கை- இந்திய உடன்பாட்டில் முஸ்லிம்களின் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டிருந்தன என்ற பலமான கருத்து முஸ்லிம் அரசியல் வாதிகளிடம் இருக்கிறது. முன்பு ஏற்பட்ட உடன்பாடுகளை விட முஸ்லிம் மக்கள் மத்தியிலும் புதிய அரசியல் சக்திகள் புதிய அரசியல் வளர்ச்சியைக் கொண்டிருக்கின்றன. அதில் முஸ்லிம் காங்கிரஸ் ஒரு சக்தியாகத் திகழ்கிறது. எனவே புதிய அரசியல் மாற்றங்களுக்கேற்ப அனைத்து முஸ்லிம் சக்திகளுடனும் தமிழ் மக்கள் ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் எதிர் கால ஆளுமையைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன்.

**இஸ்ஸதீன்:**

விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை இப்போதுள்ள சர்வ கட்சி மாநாட்டில் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி நிராகரித்து விட்டது. அக்தோடு முஸ்லிம்களுக்கென ஒரு மாகாண சபையை அதன் செயலாளர் நாயகம் தற்போது வலியுறுத்தி வருகிறார்.

---

# காத்தான்குடி, 90



இனி நடக்கப் போவது என்ன?

ஒன்றுமில்லை.

பிரார்த்தனை கூடத்தில்
சிதறுண்டிருக்கும் உடல்களின் மேல்,
அவற்றிடை
ஒருராட்சதக் கொலைக்கரம்
உருக்கிய குருதிச் சேற்றில்,
அந்தகாரத்தில் ஒலித்துக் கொண்டிருக்கும்
அலறலில்,

ஸ்தம்பிக்கிறது காலம்.

தமிழன் என்னும் என்
அடையாளக் கூறின் மேல்
வெட்கம்

இருள் விரவிப் படிகிறது.......

"என்னைக் கொல்லாதே"
என்று ஈரக்கனர்களுடன் இரந்த
ஈழத்தின் மனச்சாட்சியையும்
கொன்றார்கள்.

– சிவா. கௌதமன்.

என்ன?

உங்கள் ஒவ்வொருவருக்கும்
தான்
ஆயுதம் தந்தாயிற்றே!

பிறகுமென்ன?

மாறி மாறி தலைகளைச்
சீவிக்கொள்ளுங்கள்.

ஏன் இந்த குடியிருப்புக்களை
விட்டு வைத்தீர்?
யாருக்காக?

வயல் வெளிகளுக்குக்கூட
நெருப்புவையுங்கள்

பள்ளிவாசலும்,கோவிலும்
புனிதமென்று
யார் சொன்னார்கள்?

தெறிக்கிற குருதி
குர்ஆனையும்
வேதங்களையும்
கறைப்படுத்தட்டும்.

நாகரீகம் வளர்ந்த பின்னும்
இன்னும்
மிருகங்களையா
பலியிட்டுக்கொண்டிருக்க
முடியும்?

எல்லாவற்றையும்
'அவர்கள்'
அபகரித்துக்கொள்ளும் வரை
போரிட்டுக் கொண்டிருங்கள்!

பிறகு
பூட்டிக்கொள்வர்
வண்டியின் நுகத்தில்
உங்களை
எருமைகளாய்.

– அந்நியன்.

---

**இப்பேட்டி தொடர்பாக வாசகர்கள், அரசியலார் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன**

---

Jaffna Diocesan
யாழ் - மறைமாவட்ட
P. O. Box 2, Bishop's House
Jaffna, Sri Lanka
Tel. No. 22161

அடிக்கடி நடக்கும் விமானக் குண்டு வீச்சு ஏராளமான மக்களை வீடற்ற நிலைக்குத் தள்ளியுள்ளது. இப்போது 4–10 வரையான விமானங்கள் ஒரே நேரத்தில் குண்டு வீச்சில் ஈடுபடுகின்றன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட கட்டிடங்கள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகளின் அரண்களைத் தகர்ப்பதற்காகவே நடாத்தப்படுவதாகச் சொல்லப்படும் இக்குண்டு வீச்சுகள் நிச்சயமாகவே குறி தவறியவை, என்பதை யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டையிலிருந்து 3 கிலோமீற்றருக்கு அப்பால் இருக்கும் சென்ற். ஜோசப்ஸ் முதியோர் இல்லமும், கோட்டையிலிருந்து 1 1/2 கிலோமீற்றருக்கு அப்பாலிருக்கும் யாழ் கதீட்ரல் சேர்ச்சும் குண்டுகளால் தாக்கப்பட்டுள்ளமை காட்டுகிறது.

இவற்றை விட ஆலயங்கள் பாடசாலைகள் வங்கிகள், மருத்துவமனைகள் பல தாக்கப்பட்டுள்ளன..................

துர்நாற்றம் வீசும், சூழலை மாசுறச் செய்யும் கழிவுப் பொருட்களும் பிறவும் பெரிய பாத்திரங்களில் அடைக்கப்பட்டு, இரண்டு நாட்கள் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தின் 20 இடங்களில் ஏன் வீசப்பட்டன என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடியாமலிருக்கிறது..................

– யாழ். ஆயரில்லத்திலிருந்து.

நன்றி - நூலகத்திட்டம்



# (முஸல்) மான் வேட்டை

—— டொமினிக் ராஜ் ——

ஓகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி காத்தான் குடியில் இரு பள்ளி வாசல்களில் நூற்று நாற்பதுக்கும் அதிகமான முஸ்லிம் மக்கள் படுகொலை செய்யப்பட்டமையும், அதன் பிற்பாடு ஏறாவூரிலும் வேறும் சில இடங்களிலும் முஸ்லிம் மக்கள் - அவர்கள் முஸ்லிம்கள் என்ற ஒரே காரணத்திற்காக - சுட்டும், வெட்டியும் வீழ்த்தப்பட்டிருப்பதும் ஒரு இனப்படுகொலை (Genocide) தவிர வேறல்ல.

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், மற்றும் சில முஸ்லிம் அமைப்புக்களும் அரசும் விடுதலைப் புலிகளே இந்த இனப்படுகொலையை புரிந்தவர்கள் என்று கூறியிருக்கிறார்கள். காத்தான்குடியில், சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் விடுதலைப் புலிகளில் சிலரை அடையாளம் கண்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்னொருபுறம், அரசு படைகளுக்கும் இந்தப் படுகொலைகளுக்கும் தொடர்பு உண்டு எனவும் தமிழ் - முஸ்லிம் மக்களைப் பிரித்தாள்வதற்காக அரசின் கைக்கூலிகள் இப்படுகொலைகளைப் புரிந்துள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

மதவாச்சிக்கு அண்மையில் முஸ்லிம் கிராமம் ஒன்றில் 14 பேர் அரச படைகளால் கொல்லப்பட்டு கிணற்றுள் வீசப்பட்ட சம்பவத்தை (சென்ற மாதம்) நாம் நினைவு கூரலாம்.

இத்தகைய இனப்படு கொலைக்கு யார் பொறுப்பு என்று திட்டவட்டமாக எம்மால் சொல்ல முடியாவிட்டாலும் அது பிரச்சினையின் ஒரு பகுதி தான்.

சிங்கமா புலியா (முஸல்) மானைக் கொன்றது? என்ற கேள்விக்கு இப்போதைய விடை, சிங்கமும் சரி புலியும் சரி இத்தகைய படுகொலைகளுக்குத் தயாரானவை மட்டுமல்ல இரண்டுமே இத்தகைய இனப்படுகொலையைப் புரிந்திருக்கக் கூடியவை, என்பதே.

யார் பொறுப்பாயிருந்தாலும், இந்த இனப்படுகொலைகள் கோழைத்தனமானவை, தீவிரமாகக் கண்டிக்கப்பட வேண்டியவை. அரசியல் கையாலாகாத்தனமும் மூளைக்குள் வெடி மருந்து வைத்திருப்பவர்களால் மட்டுமே இத்தகைய காட்டேறித்தனத்தை வெளிப்படுத்த முடியும்.

முன்னெப்போதுமில்லாதவாறு இன்று இலங்கையில் சிறுபான்மை இனக்குழுமங்களுக்கிடையேயான உறவு சிக்கல்களுக்குள்ளாகியிருக்கிறது. குறிப்பாக தமிழ் - முஸ்லிம் உறவுகள் கிழக்கு மாகாணத்தில் சீர்கெட்டுப் போயுள்ளன. இந்த நிலைமையினால் நன்மை தமிழ் மக்களுக்குமல்ல, முஸ்லிம் மக்களுக்கும் அல்ல. அரசாங்கத்துக்கும், தமிழ் - முஸ்லிம் மக்களைப் பிரித்தாளவதன் மூலம் சிங்கள / பௌத்தப் பேரினவாதத்தை மேலும் வேரூறச் செய்யும் அரசியல்வாதிகளுக்குமே நன்மை என்பதை ஒரு அடிப்படையான உண்மையாக நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில், தமிழ் - முஸ்லிம் உறவுகள் சீர் கெட்டமைக்குப் பிரதானமான பங்கை அனைத்துத் தமிழ் விடுதலை இயக்கங்களும் ஏற்க வேண்டும். இது ஒரு பொதுமைப்படுத்தப்பட்ட, மேலெழுந்தவாரியான குற்றச்சாட்டு அல்ல. உண்மையானதும், ஆதாரங்களோடு நிரூபிக்கப்படக்கூடியதும் மட்டுமல்லாமல குறிப்பான தமிழ்... இப்ப. எழுதுவதன மூலம் கிழக்கு மாகாணத் தமிழ் - முஸ்லிம் உறவுகளை/உறவு விரிசல்களை வரலாற்றுச் சமூகப் பகைப்புலத்தில் நான் வைக்க மறுக்கவில்லை. மாறாக, நான் தமிழர்களுடைய பங்குக்கு அழுத்தம் தர விரும்புவது எதற்காகவெனில் சிங்கள ஆட்சியும், சிங்கள அபிப்பிராயமும் தமிழ் மக்களுக்குச் செய்ததை/செய்வதையே தமிழ் மக்களும், தமிழ் "அரசு"களும் முஸ்லிம் மக்களுக்குச் செய்யக்கூடாது என்பதற்காகவே.

யூதர்கள் நாஸிகளிடம் பட்ட கொடுமையைப் பலஸ்தீனியர்களிடம் காட்ட முடியாது. பின்வரும் சம்பவக் கோர்வையை நோக்குங்கள், 1985 இலும் 1986 இன் ஆரம்பப் பகுதிகளிலும் பல்வேறு விடுதலை இயக்கங்கள் பல்வேறு காரணங்களுக்காக முஸ்லிம் உடைமைகளைக் கொள்ளையடித்தும் முஸ்லிம்களைக் கொன்றுமுள்ளன. மன்னாரில் பள்ளிவாசலினுள் வைத்து சில முஸ்லிம்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஈழப்புரட்சி அமைப்பினர் (EROS) இச்சம்பவத்தில் தொடர்புற்றிருந்தனர் எனச் சொல்லப்படுகிறது. இதே காலப்பகுதியில் மூதூர் பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் முஸ்லிம் கிராமத்தை தாக்கியுள்ளார்கள். புலிப் போராளி ஒருவர் முஸ்லிம்களால் பிடிக்கப்பட்டு அதிரடிப்படையிடம் கொடுக்கப்பட்டமைக்குப் பழிக்குப் பழி என்று பின்னர் சொல்லப்பட்டது.

1987, செப்ரெம்பர் 3 ஆம் திகதி மூதூர் உதவி அரசாங்க அதிபர் ஹபீப் மொகமது அவர்கள் தமிழ் விடுதலை இயக்கமொன்றுல் கொல்லப்பட்டார். இதற்கு எதிர்ப்புத்தெரிவிக்கும்முகமாக கல்முனையில் நடந்த எதிர்ப்பு ஊர்வலம் அடித்துக் கலைக்கப்பட்டது மட்டுமன்றி முஸ்லிம் கடைகளும் தாக்குதலுக்குள்ளாகின.

1987 டிசெம்பர் 30இல் காத்தான்குடியிலும், அயற்கிராமங்களிலும் 28 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

1988 மார்ச்சில் கல்முனை தாக்கப்பட்டு 25 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். அதே காலப்பகுதியில் சாய்ந்தமருது, மாளிகைக்காடு ஆகிய கிராமங்கள் தாக்கப்பட்டு நூற்றுக் கணக்கான வீடுகள் எரிக்கப்பட்டன.

1988, நவம்பர் 17 இல் EPRLF, ENDLF, TELO போன்ற இயக்கங்களின் தயாரிப்பான தமிழ்த் தேசிய ராணுவம் (TNA) 40 முஸ்லிம் பொலிஸ்காரர்களை தனியே பிரித்தெடுத்து படுகொலை செய்தது. இப்பொலிஸ் காரர்கள் சம்மாந்துறை, நிந்தவூர், சாய்ந்தமருது ஆகிய இடங்களைச்சேர்ந்தவர்கள்.

1989 ஜூனில் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் அங்காடி வியாபாரிகளது எழுபதிற்கும் மேற்பட்ட கடைகள் எரிக்கப்பட்டன.

1989இல் சம்மாந்துறை மற்றும் முஸ்லிம் கிராமங்களில் மேற்படி இயக்கங்கள் கடத்தல் கொள்ளை, கொலைகளில் தாராளமாக ஈடுபட்டன. முஸ்லிம் வெறுப்பிலேயே கட்டி எழுப்பப்பட்ட இந்திய ராணுவம் ஒத்தாசை புரிந்தது.

இது முற்றுமுழுதான தொகுப்பு அல்ல. மாதிரிக்குச் சிலவே. இன்னொரு புறத்தில் முஸ்லிம்தலைமைத்துவமும் முஸ்லிம் மக்களும் தமது பொறுப்புணர்விலிருந்தும் தமிழ் மக்களுடனான பரஸ்பரத் தங்கியிருத்தலிலிருந்தும் விடுபட்டு சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு துணை போகவியலக் கூடாது.

வரலாறு கசப்பான அனுபவங்களை தமிழ்மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் தந்துள்ளது. சேர் ராஸிக் பரீத்தின் சித்தாந்த ரீதியான முஸ்லிம் தீவிரவாதமும் தமிழ் எதிர்ப்பும் நீண்ட காலக் கண்ணோட்டத்தில் உதவாது என்பதை இன்றைய முஸ்லிம் தலைமைத்துவம் புரிந்து கொள்ள வேண்டும். அது போலவே கிழக்கிலிருந்து முஸ்லிம் காங்கிரஸ் உருவாகி முஸ்லிம்களுக்காகக் குரல் கொடுக்க ஆரம்பிப்பதற்கு முன்னர் முஸ்லிம்களைப் பாதித்து வந்த எல்லா விஷயங்களையும் முஸ்லிம் அல்லாத தலைவர்களே பாராளுமன்றத்துள் எழுப்பியிருக்கிறார்கள். சில உதாரணங்கள் தரலாம்.

முகமது நபி (ஸல்) பிறந்த தினத்தையும் ரமழான் ஆரம்ப தினத்தையும் விடுமுறையாக பிரகடனப்படுத்தும்படி குரலெழுப்பியவர் திரு. லெஸ்லி குணவர்த்தன அவர்கள்.

ஐம்பதுகளில் சில முஸ்லிம் ஆசிரியர்கள் சிங்கள வர்ணனுல் தாக்கப்பட்டமை பற்றிய பிரச்சினையை பாராளுமன்றத்தில் கிளப்பியவர் குஸூமாரா ரத்ன அவர்கள்.

1976இல் புத்தளத்தில் 12 முஸ்லிம்கள் அரச படைகளால் சுட்டுக் கொல்லப்பட்ட போது அதனை பாராளுமன்றத்தில் பிரச்சினையாக்கியவர் திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள்.

சேர் ராஸிக் பரீத் அவர்கள் முஸ்லிம்களுக்காகக் குரல் கொடுத்தது உண்மை எனினும் சிங்களம் மட்டும் சட்டத்தை அவர் தீவிரமாக ஆதரித்தமை மட்டுமல்லாமல் அகில இலங்கை முஸ்லிம் சங்கமும் (ALL CEYLON MOORS' ASSOCI -ATION), அகில இலங்கை முஸ் லிம் கழகமும் (ALL CEYLON MUSLIM LEAGUE) "சிங்களம் மட்டும்" சட்டத்தை ஆதரிக்க உழைத்தார் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

அக்காலத்தைய முஸ்லிம் தலைமைத்துவம் கொழும்பையும் அதனை அண்டிய பணக்கார வர்த்தகர்களையே பிரதிநிதித்துவப்படுத்திற்று என்பதால் மேற்கூறிய நிகழ்வுகளைப் புரிந்து கொள்ளலாம். எனினும் கிழக்கிலிருந்து உருவாகி வரும் முஸ்லிம் தலைமைத்துவம் இத்தகைய பிரச்சினைகள் குறித்து நிதானமாகவும், தெளிவாகவும் புரிந்துணர்வுடனும் செயற்பட வேண்டும்.

பொதுவாகவே தமிழ் - முஸ்லிம் உறவுகள் வடக்கிலும், தெற்கிலும் ஆரோக்கியமானவையாக இருந்து வந்துள்ளன. கிழக்கில் தமிழ் - முஸ்லிம் கிராமங்களின் அமைவு முறைமை, நிலம், பயிர்ச்செய்கை போன்ற காரணிகளிலும் (அம்பாறை மாவட்டத்தின் 75% நெல் நிலங்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 25% நெல் நிலங்களும் முஸ்லிம் மக்களுடையவை) அவ்வப்போது இரு இனக் குழுமங்களுக்கிடையேயும் விரிசல்கள் கிளர்ந்தாலும் 1985 வரை பெரிய அளவு மோதல் ஏதும் ஏற்படவில்லை. உண்மையில், சிங்கள மேலாதிக்கமே - நிலத்தையும் குடியேற்றத்தையும் பொறுத்தவரை - தமிழ் - முஸ்லிம் இனக் குழுமங்களுக்குப் பொது எதிரியாக இருந்தாலும் இப்போது பொது எதிரி பின் தள்ளப்பட்டாயிற்று. சந்தர்ப்பம் கிடைக்கிற போதெல்லாம் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒருவரை ஒருவர் கொன்றும் உடைமைகளை அழித்தும் வருகிறார்கள். இன்றைய நிலையில் இரண்டு புறமும் இனத்துவப் படையாட்களே (ethnic soldiers) மேலோங்கியுள்ளார்கள். அவர்களது கருத்தியல் "பழிக்குப் பழி" கண்ணுக்குக் கண்" என்பதே தவிர வேறல்ல இது ஒரு நச்சுச் சுழலாகும்.

இந்த நச்சுச் சுழலை உடைப்பதில் தமிழ் மக்களும், அவர்களை பிரதிநிதித்துவப் படுத்துவதாகச் சொல்லிக் கொள்ளும் கட்சிகள்/ இயக்கங்கள்/ தலைமைகளும் முன் வழி காட்டவேண்டும்.

எப்படி? என்று ஒரு கேள்வி எழுகிறது. கிழக்கு முஸ்லிம் மக்கள் தங்களைத் தனியானதொரு இனக் குழுமமாகக் கருதி வந்திருக்கிறார்கள். யதார்த்தத்தில் அவர்களுடைய அடையாளம் இஸ்லாத்தை

— 8ம் பக்கம் →

"பிரஜை" எழுதுவது:

## தேசத்தின் குறிப்புக்கள்

நன்றி: தூண்டில்

வடக்குக் கிழக்கு யுத்தம் தொடங்கிய இந்த 2 மாதங்களுள் இதுவரை 300க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கொலைசெய்யப்பட்டுள்ளார்கள் என்று முஸ்லிம் கொங்கிரஸ் அறிவித்துள்ளது

கிழக்கு மாகாணத்தில் மட்டும் 250பேர்வரை புலிகளால் கொலலப்பட்டுள்ளார்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள்

கல்முனைப் பகுதியிலும், கிழக்கு மாகாணத்தில் பரவலாகவும் தமிழ் - முஸ்லிம் கலவரங்கள் நடந்துள்ளன.

தினசரி கொழும்புப் பத்திரிகைகளில் முஸ்லிம்களைப் பள்ளிவாசல்களில் வைத்தும் வெளியேவைத்தும் கிராமங்களைத் - தாக்கியும் புலிகள் கொன்றுவருவதாக அரசு செய்திகளைத் தருகிறது. மாங்குளத்தில் 19பேர் கொல்லப்பட்டுக் கிணற்றில்போடப்பட்டிருப்பதாக அரசு அறிவிக்கிறது.

இந்தச் செய்திகள் மிகவும் கவலைக்கிடமான செய்திகளாக இருந்ததால் நான் எனது 'அரசியல்' நண்பரைத் தேடிப் போனேன்.

வாசகர்களுக்கு ஏற்கெனவே அறிமுகமான இந்த நண்பருடன் நிலைமைகளைப் பற்றி விவாதிப்பதில் எனக்கு ஒரு திருப்தி.

அவரிடம் இந்தச் செய்திகளைப் பற்றிக் கேட்ட போது அவர் தன்னிடம் பத்திரிகைக்கட்டுகளை அடுக்கி வைத்துக்கொண்டு போரில் இறந்த, எரிக்கப்பட்டப் பொதுமக்களை எண்ணிக் கொண்டிருந்தார்.

"என்ன செய்கிறாய்?"

"கொழும்புப் பத்திரிகைகளின் நிருபர்கள் தரும் செய்திகளின்படி போரில் எந்த சிவிலியன்களும் இறந்ததாகத் தெரியவில்லை" என்றார் அவர்.

நான் 250 முஸ்லிம்கள் கிழக்கில் கொல்லப்பட்டிருப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் சொன்னதைப் பற்றிக் கேட்டேன்.

"அது போரில் அல்ல. இன ஒழிப்பு நடவடிக்கையாக எல். ரி. ரி. ஈ. செய்ததாக அல்லவா வந்துள்ளது" என்றார் அவர்.

"எப்படியோ இது தமிழ் முஸ்லிம் மக்களிடையே பிளவை ஏற்படுத்தாதா? இது அரசாங்கத்தின் திட்டமிட்ட பிரச்சாரமென்றே நான் நினைக்கின்றேன்" என்றேன் நான்.

அவர் சிரித்தார்.

"நமது பேராசிரியர் ஒருவர் சொன்னார் ஒருமுறை, எல்லாத் தமிழர்களுடைய மனதிலும் ஒரு சின்னப் 'புலி' இருக்கிறது என்று. அது உண்மைபோலத்தான் இருக்கிறது"

"ஏன்?"

"அரசாங்கத்தின் பிரச்சாரம் என்று சொல்கிறாயே. ஏன் எமது 'இயக்கங்கள்' அப்படிச் செய்ய மாட்டாவா?"

"இல்லை.. இந்த நேரத்திலை..." எனக்குச் சரியாக ஒரு பதில் சொல்ல முடியவில்லை. நான் தடுமாறினேன்.

"தம்பி, உனக்கு விசயங்கள் பிடிபடுற அளவுக்கு அதை நம்பமுடியாமல் இருக்கு. அது தான் உன் மனதுக்குள்ளும் ஒரு 'புலி இருக்குது என்று சொன்னேன்" என்றார் அவர்.

'தம்பி' என்று அவர் அழைப்பது இடைக்கிடை நடப்பதுதான். ஆனால் அதிலும் ஒரு வகை சிலேடை நயம் இருப்பது எனக்கு அப்போது புரியவில்லை.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"அரசாங்கம் தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்களையும் பிரிக்கப் பார்க்குது என்பது போலத்தான் முன்பு கூட்டணியும் தமிழரசுக் கட்சியும் தமிழரையும், சிங்களவரையும் பிரிக்கப் பாக்கினம், இனவாதம் பேசுகினம் என்று எங்கட இடதுசாரிகள் சொன்னவை"

"அது அவையள் பிரச்சினையைச் சரியா எடைபோடாமல்..."

"எடை போடுறதல்ல பிரச்சினை. யார் என்ன சொன்னாலும் அது எடுபடுகிற நிலை ஏற்கெனவே இருந்தாலொழிய அது எடுபடாது என்பதுதான் பிரச்சினை. கட்டாந்தரையிலை விதையைப் போட்டால் முளைக்காது என்கிற மாதிரி ஏதோ ஒரு உதாரணம் பைபிளிலை வரும் தெரியுமே?"

"தெரியும்"

"அது மாதிரித்தான். இந்தமாதிரி இனப்பிளவு வேலைகளுக்கு வசதியான விளைநிலமாக எமது தமிழ்-முஸ்லிம் உறவு இருக்குது. அதாலைதான் எடுபடுகுது அல்லாட்டி அமிர்தலிங்கம் கோஷ்டியின் கோஷ்டி காலம் அன்றைக்கு எடுபட்டிராது. அந்த மாதிரி நிலத்தைத் தயார்ப்படுத்தித் தந்துவிட்டது அரசு. இப்ப முஸ்லிம் தமிழ்ப் பிரச்சினையும் அப்பிடித்தான்.."

"அதுக்கும் இதுக்கும் சம்பந்தமில்லையே? தமிழரும், முஸ்லிம்களும் - நீண்டகாலமாக ஒற்றுமையாகத்தானே இருந்தவை?"

"இந்த ஒற்றுமைதான் பிரச்சினையே. எந்த அடிப்படையிலை ஒற்றுமை இருந்தது? முஸ்லிம் மக்களின்ரை தனித்துவத்தை எப்பவாவது எங்கடை தமிழ்க் கட்சியள் அங்கீகரிச்சிருக்குதா? சிங்களக் கட்சியள் தமிழ் மக்களின்ரை தனித்துவத்தை அங்கீகரிக்க மறுத்த மாதிரித்தான் தமிழ் கட்சியளும் நடந்திருக்கு"

"ஏன், கூட்டணியிலை இருந்து புலியள்வரை எத்தினை முஸ்லிம்கள் வேலை செய்யினம். செய்திருக்கினம்"

"அப்பிடி விசயத்தைப் - பாக்கேலாது. அப்பிடியென்டால் எத்தினை தமிழர் யூ. என். பி. யிலை இருந்திருக்கினம். தங்கடை இன அடையாளம் மதிக்கப்படுகிறதா இல்லையா என்பதுதான் இங்கை பிரச்சினை. எங்கடை இயக்கங்கள் எல்லாம் முஸ்லிம்களை ஒரு தனித்துவ இனம் என மதிப்பதில்லை" என்று அவர் மேலும் தொடர்ந்தார்.

"முஸ்லிம்கள் தமிழ்மொழியைப் பேசினாலும் அவர்களின் - இன அடையாளம் வேறு. எப்படி மலையகத் தமிழர்களும், இலங்கைத் தமிழரும் ஒரு இனம் என்று சொல்ல முடியாதோ அப்படியே முஸ்லிம்களும் தமிழர்களும் கொண்டுள்ள இன அடையாளங்கள் வேறு வேறு. நாம் ஒன்று - ஒன்றாக இருப்போம்- எனக் கருதி அவர்களை நசுக்கும் மனோபாவம்தான் எங்கடை தமிழர் மத்தியிலை இருக்குது. குறிப்பாக அரசியற் கட்சிகளிடமும், இயக்கங்களிடமும்."

"தமிழ் பேசும் இஸ்லாமியர், தமிழ் பேசும் கிறிஸ்தவர்கள், தமிழ் பேசும் சைவர்கள் என்று எல்லோரும் தமிழ் பேசுபவர்கள் என இணையலாமே? ஏன் மதரீதியாக இவர்கள் பிளவுபடவேண்டும்?"

"இது வெறும் மதப் பிரச்சினையல்ல. கிறிஸ்தவமும், சைவமும் தமிழர்களின் மதங்கள். ஆனால் முஸ்லிம்களின் மதம் இஸ்லாமியம். முஸ்லிம்கள் முதலாவதாகத் தமிழர்கள் அல்ல - அவர்கள் தமிழ் பேசிய போதும்! ஆனால் அவர்க்கும் ஒரு சிறுபான்மையினம் என்றபடியால் எங்கடை .- போராட்டம் அவர்களுக்கும் தேவையாக இருக்குது. ஆனால் அவர்களை இணைக்க எங்கடை இயக்கங்கள் எந்த அக்கறையும் காட்டுவது கிடையாது"

"எங்கடை இயக்கங்கள் தங்களுக்கிடையிலேயே ஒற்றுமை இல்லாமல் இருக்குது..." என்று சலித்துக்கொண்டேன் நான்.

"அதுவேறை. இதுவேறை அதுவும் ஒருவகை அங்கீகாரம் பற்றிய பிரச்சினைதான். ஆனால் இது ஒரு இனம் பற்றிய பிரச்சினை. அதைக்கூட ஒருவேளை வேறைகாரணிகள் ஒன்றுபடுத்தலாம் ஆனால் இது திட்டவட்டமாக அங்கீகாரத்துடன் சம்பந்தப்பட்டது தன்னோடுள்ள ஒரு சிறுபான்மையினத்திற்குரிய அடையாளங்களை அங்கீகரிக்கவும், மதிக்கவும் அதன் உரிமைகளைப் பேணவும் தயாரில்லாத இன்னொரு இனம் தனது விடுதலைக்காப் போராடும் தகுதியே அற்றது"

"என்ன சும்மா அடையாளம் அது இது என்னுறீர். அரசாங்கம் செய்யிறது பொய்ப்-பிரச்சாரம் இல்லையா?"

"பொய்ப் பிரச்சாரமாக இருக்கட்டும். ஆனால் அது உண்மையாக இருந்தாலும் வியப்பில்லை. 'அடையாளம்' என்பது எவ்வளவு தூரம் உணர்வு பூர்வமானது என்பது உனக்குப் புரியவில்லையா? தமிழன் வணங்கும் கோவில் என்பதற்காக ஒரு சைவக் கோயிலை இராணுவம் உடைத்தால் உனக்கு எப்படி இருக்கும்?"

"எனக்கு கடவுள் நம்பிக்கை இல்லை"

"உது விதண்டாவாதம். சரி, யாழ்ப்பாணம் நல்லூர்க் கோயிலை உடைத்துவிட்டு ஒரு புத்த கோயிலை வைத்தால்.. வேண்டாம் திரும்பவும் கோயில் உதாரணம். றத்மலானை இந்துக் கல்லூரியை உடைத்தபோது நீ என்ன சொன்னாய்?"

"அது கலவர நேரம். தமிழன்ரை எல்லாத்தையும் உடைச்சவங்கள்தானே!"

"இதுதான் அடையாளம் என்கிறது. தமிழர்களுடையவை என்றிருக்கும் எல்லாவற்றையும் அவமதிப்பது, அழிப்பது.. அந்த வேலையில் எமது இயக்கங்கள் ஈடுபடவில்லையா? ஈரோஸ் முதல் புலிகள்வரை அனைத்து இயக்கங்களும் முஸ்லிம் மக்களைக் - கொன்றிருக்கின்றன. ஒரு தனிப்பட்ட முஸ்லிமைக் கொல்வது - கொலை. அதற்கு இனச் சாயம் பூசத் தேவையில்லை. ஆனால் முஸ்லிம் பள்ளிவாசலுள் இராணுவ- உடையுடன் புகுந்து துப்பாக்கியால் மிரட்டுவது, கொல்வது என்பன இனக்கொலையல்லாமல் வேறென்ன?"

"அப்ப என்னதான் சொல்கிறாய்?"

"இது தம்பி எங்கடை தமிழரசுக் கட்சி காலத்திலையிருந்து 'தொப்பி-பிரட்டி' என்று சொல்லிச் சொல்லி பேதம் காட்டிவந்த விசயம். முஸ்லிம்மக்களின்ரை தனித்துவத்தை அங்கீகரித்து, அவர்களின் சனாுபக உரிமைகளை வழங்கி ஐக்கியப்பட்-டால் ஒழிய அஸ்ரப் போன்றவர்களும், அரசும் தமிழ்- முஸ்லிம் மக்களிடையே மேலும் மேலும் பிளவை ஏற்படுத்துவதை தவிர்க்கமுடியாது. அப்படிப் பிளவுபட்டு போராடுவதன் மூலமாவது தங்கள் இன அடையாளத்தை நிலைநாட்டவே முஸ்லிம்கள் விரும்புவர்"

"இப்ப என்ன செய்யிறது அப்ப.."

"ஒன்றும் செய்யேலாது. செய்ய உன்னிடம் இருக்கிறதா தவக்கு? முடிந்தால் தமிழ்- முஸ்லிம் மக்களிடையே ஐக்கியத்தை வலியுறுத்துவது, முஸ்லிம் மக்களின் இன அடையாளத்தை மதிப்பதோடு சம்பந்தப்பட்டது என்று இயக்கங்களுக்குச் சொல்லு. அவர்கள்தான் ஏதாவது செய்யவேண்டும்"

நான் என்னமுடியும் என்று தெரியாமல் யோசித்துக்கொண்டிருந்தேன்.

இன்றைய பேப்பரில் மேல்மாகாணசபை உறுப்பினர் இலியாஸின் பேச்சு வந்திருந்தது. அவர் சொல்கிறார்:

... முஸ்லிம்களின் கொலைகளுக்குப் புலிகள் மீது முழுக்க முழுக்க குற்றம் - சுமத்த முடியாது. அது தமிழ்- முஸ்லிம் மக்களைப் பிளவுபடுத்த சில தீயசக்திகள் செய்யும் முயற்சி ...

இதைப்படித்த போது கொஞ்சம் தெம்பாக இருந்தது ஆனால் இன்னொரு செய்தியும் என் கண்ணில் பட்டது:

அக்கரைப்பற்றில் வவுனியாவிலிருந்து திரும்பிய 14 முஸ்லிம்களை புலிகள் எனச் சந்தேகிக்கப்படுவோர் கொன்றனார்கள்..

நான் இடிந்துபோய் உட்கார்ந்திருக்கிறேன்.

நன்றி - நூலகத்திட்டம்



# சண் எழுதுவது

## 1. இனத்துவ முரண்பாட்டின் மூலம்.

அரசபடைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தத்தின் கசப்புணர்வை கவனிக்கும்போது, இப்போராட்டம் தொடங்கியதற்கான மூல நிலைமைகளைச் சிறிது கவனிப்பது அவசியம் என நினைக்கிறேன். இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் அந்நியர் ஆதிக்கத்தின் கீழ் இலங்கை இருந்த காலத்தில் தமிழ் சிங்கள முதலாளித்துவ தலைவர்கள் மேலதிக சலுகைகளுக்காக வாதாடிய காலத்தில் அவர்களிடையே நல்லுறவு நிலவி வந்தது. E.W.பெரேரோ,பொன். ராமநாதன் போன்றவர்கள் ஒருமித்து நின்று கூடுதல் சுதந்திரம் கேட்கத் தயங்கவில்லை.

உண்மையில் 1915ல் "மார்டில் லோ" (Martial Law) கலவரம் உருவான பின் D.S. சேனநாயக்க போன்ற சிங்களத் தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலிடப்பட்டதை எதிர்த்து அவர்களை விடுவிக்க வெள்ளைக்கார அரசுடன் இந்தியா சென்று வாதாடியவர் இராமநாதன். அந்தச் செய்கையை சிங்களவர்கள் எவ்வளவுதூரம் மகிமையாக கருதினார்கள் என்பதை அவர் திரும்பிவந்த போது அவரது பல்லக்கை இழுத்த குதிரைகளை அப்புறப்படுத்திவிட்டு A.E. குணசிங்க உட்பட பல சிங்கள தலைவர்கள் தாம் இழுத்துச் சென்றதில் இருந்து அறிந்துகொள்ளலாம்.

1919ல் இலங்கை தேசிய காங்கிரஸ் உருவானபோது அதன் தலைவராக இராமநாதனின் சகோதரரான சேர் பொன் அருணாசலம் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்கு முன்பே 1912ல் படித்த அங்கத்தவர் தொகுதிக்காக நடந்த தேர்தலில் கூடிய வாக்காளர்கள் சிங்களவர்களாக இருந்த போதிலும் இராமநாதனுக்கு மார்கஸ்பெர்னாண்டோவை தோற்கடிக்க முடிந்தது. இரண்டாவது முறையும் இராமநாதன் ஜெயவர்த்தன என்ற இன்னொரு சிங்களவரை தோற்கடித்தார்.

அந்தக்காலத்தில் சிங்களவர் தமிழர் என மொழி அடிப்படையில் பிளவுகள் இருந்ததாக தெரியவில்லை. பதிலாக சாதி (cast) க்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதாக ஊகிக்க இடமுண்டு. இராமநாதன் சிங்கள 'கொவிகம'வுக்கு சமமான ஒரு யாழ்ப்பாண வெள்ளாளனாகவும் மார்க்கஸ் பெர்னாண்டோ கரையார், சாதியை சேர்ந்தவராகவும் (சிங்கள 'கரவ') இருந்ததால் இராமநாதன் சிங்கள 'கொவிகம' சாதியினரால் ஆதரிக்கப்பட்டார் எனக் கருத இடமுண்டு.


அந்நிய ஏகாதிபத்தியம் மேலும் மேலும் சலுகைகளை வழங்கத்தொடங்கியதும் அச்சலுகைகளை தம்மத்தியில் பிரித்துக் கொள்வது தொடர்பாக தமிழ் சிங்கள முதலாளித்துவ தலைவர்களிடையே பிளவும் ஏற்படத்தொடங்கியது. இந்தப்பிளவே 1922 இல் இராமநாதன் சகோதரர்களை இலங்கை தேசிய காங்கிரஸில் இருந்து விலகவும் இலங்கை அரசியலில் இருந்து பெருமளவில் ஒதுங்கவும் வழிவகுத்தது.


1931 இல்தான் டொனமூர் சட்டத்தின் கீழ் முதலாவது சட்டசபைக்கு தேர்தல் நடைபெற்றது. இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாண வாலிபர் சங்கம் என்று ஒரு அரசியல் ஸ்தாபனம் இயங்கிவந்தது. இதன் முக்கிய தலைவர் ஹன்டி பேரின்பநாயகம் ஆவர். அவர்கள் தேசிய உணர்வுக்கு முக்கியத்துவம் கொடுத்து டொனமூர் திட்டத்தின் கீழ் நடந்த தேர்தலை பகிஸ்கரிக்குமாறு சகல அரசியல் கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுத்தனர். அவர்கள் டொனமூர் திட்டத்தை எதிர்த்தது தமிழர்கட்கு விசேட உரிமைகளை மறுக்கப்பட்டதால் அல்ல. பதிலாக முழு இலங்கைக்கும் பூரண சுதந்திரம் கொடுக்கத் தவறினதாலேயே. ஆனால் இவர்களின் இயக்கத்திற்கு தென்பகுதியில் இருந்து ஆதரவு கிடைக்கவில்லை. வடபகுதி நான்கு தொகுதிகளிலும் ஒருவரும் போட்டியிடாமல் விடுமாறு செய்யுமளவுக்கு அவர்கள் சக்தி பெற்றிருந்தார்கள். அந்தக்காலத்தில் இந்திய காங்கிரஸ் தலைவர்கள் நேரு,கமலா தேவி சத்தியமூர்த்தி போன்றவர்கள் யாழ் வந்து இவ்வாலிபர் சங்கத்திற்கு ஊக்கம் அளித்தனர். ஆனால் முதலாவது தேர்தலுக்கு பிறகு தேசத்தில் எழுந்த இனவாதத்திற்கு எதிராக இவர்களால் முகம் கொடுக்க முடியவில்லை. டொனமூர் திட்டத்திற்குள் இனக்கலவரத்திற்கு தூபமிடக்கூடிய கூறுகள் அடங்கியிருந்தன. அதன் அடிப்படையில்தான் இலங்கைக்கு முதன் முதலாக சர்வசன வாக்குரிமையும் பிரதேசவாரியான பிரதிநிதித்துவமும் அளிக்கப்பட்டது. ஓரின மக்கள் மட்டும் வாழும் ஒரு நாட்டிற்கு இது மிகவும் நல்லதே. ஆனால் நமது நாடு போன்ற ஒரு பல்லின மக்கள் வாழும் நாட்டில் இது இறுதியில் பெரும்பான்மையினருக்கு அதிகாரத்தை முழுமையாக வழங்குவதற்கு இட்டுச் செல்லும். இராமநாதன் இச்சர்வசன வாக்குரிமையை எதிர்த்ததற்கு இது ஒரு காரணமாகும். அவரது மற்றைய காரணம் பாமரர் ஆட்சி (mobrule) உருவாகலாம் என்பது!

முதலாவது சட்டசபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிசபையில் ஒரு தமிழரும் ஒரு முஸ்லிமும் இடம்பெற்றனர். இதற்கு காரணம் அன்று நடைமுறையில் இருந்து வந்த நிறைவேற்றுக்குழு (Execution Committee System) முறைமையே. ஆனால் 1935ல் நடந்த இரண்டாவது சட்டசபை தேர்தலுக்குப்பின் D.S. சேனநாயக்க இதையும் இல்லாமல் செய்தார். இரண்டாவது மந்திரிசபை அமைக்கும்போது ஒரு சிறுபான்மைப் பிரதிநிதியையும் சேர்த்துக்கொள்ளாமல் எல்லோரும் சிங்களவராக இருக்கக்கூடிய ஒரு தந்திரத்தைப் பாவித்து எல்லோரும் சிங்களவராக இருக்கும் ஒரு மந்திரிசபையை அமைத்தார். இது இனப்பிரச்சினையை இன்னமும் மோசமாக்கியது. இதற்குப் பின்னர்தான் தெற்கில் பண்டாரநாயக்காவின் சிங்கள மகாசபாவும் வடக்கில் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் தலைமையில் அகில இலங்கை தமிழ் காங்கிரசும் உருவாகின.

நா. சண்முகதாசன் - அவர்கள் இலங்கையின் மூத்த இடதுசாரித் தலைவர்களிலொருவர். மாதந்தோறும் எமது சரிநிகர்- இதழுக்கு எழுத உடன்பட்டுள்ளார்.







# உழைப்பு, பெண்கள், கூலி —

பாஞ்சாலி

ஆண்களுக்கு வழங்கப்படும் கூலிக்கும் பெண்களுக்கு வழங்கப்படும் கூலிக்கும் இடையில் அதிக வேறுபாடு நிலவுவதை நாம் அறிவோம். இக்கூலி வேறுபாட்டினைப் பலர் பலவாறு நியாயப்படுத்துவார்கள். இதனை முதலாளித்துவப் பொருளியலாளர் பின்வருமாறு நியாயப்படுத்துகிறார்கள்.

ஆண்களுக்கு வழங்கப்படும் கூலி முழுக் குடும்பத்தையும் பராமரிக்க வழங்கப்படுவதால் அதனை குடும்பத்தைப் பராமரிப்பதற்குரிய கூலி (family wage) எனவும், பெண்களுக்கு வழங்கப்படும் கூலி, குடும்பத்தைப் பராமரிக்க வழங்கப்படும் கூலியுடன் கூடவே மேலதிகமாக உழைக்கப்படும் கூலி (additional income) யும் ஆகும். மேலும், குடும்பத்தைப் பராமரிக்கும் கூலி மேலதிக கூலியை விட அதிகமாக இருக்க வேண்டும் என்பதை நியாயமாகக் கொண்டு ஆண்களுக்குப் பெண்களை விட கூடுதலான கூலி வழங்குவது நியாயப்படுத்தப்பட்டது.

பொருளாதாரச் சுரண்டலை மறைக்கும் முகமாக முன்வைக்கப்பட்ட பொருளாதாரக் கோட்பாடுகளில் இதுவும் ஒன்று. மேலும் வளர்முகநாடுகளில் காணப்படும் நிலைமை இதனை மறுதலிக்கின்றது. பெரும்பாலான பெண்கள் கூலி உழைப்புக்குச் செல்வதற்கான காரணம் அவர்களது கணவன்மாரது உழைப்பு குடும்பதனைதைப் பராமரிக்கப் போதாமல் இருப்பதால்தான். அத்துடன் கணவன் மனைவி ஆகிய இருவரும் உழைத்தும் கூட குடும்பத்தைப் பராமரிக்க முடியாத நிலையை நாம் அன்றாடம் காண்கிறோம். பல குடும்பங்களில் ஆண்கள் உழைத்து வரும் கூலியில் பெரும்பகுதி மதுபானம், பீடி, சீட்டாடுதல் போன்றவற்றினால் வீண் விரயமாகிறது. இப்படிப்பட்ட குடும்பங்களில் பெண்களது கூலியே குடும்பத்தைப் பராமரிக்க பெருமளவில் பயன்படுகிறது.

சாதாரண வறிய குடும்பங்களிலேயே இந்த நிலைமை காணப்படுகின்றதென்றால் ஆயிரக்கணக்கில் நமது பிரதேசங்களில் வாழும் விதவைகளின் நிலைமை எவ்வளவு பாரதூரமானது என்பதைச் சிந்தித்துப் பார்க்கலாம். இவ்விதவைகள் பெரும்பாலும் தமது சொந்த உழைப்பினாலேயே தமது குடும்பங்களைப் பராமரிக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கும் தொடர்ந்து மிகக் குறைந்தளவு கூலியே வழங்கப்படுகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்தவரையில் மிளகாய், புகையிலை, வெங்காயம் போன்ற தோட்டங்களில் 8-10 மணித்தியாலங்கள் வேலை செய்வதற்குப் பெண்களுக்கு 25/- தொடக்கம் 30/- வரை வழங்கப்படுகிறது. இதே வேளை 3 - 4 மணித்தியாலங்கள் வேலை செய்யும் ஆண்களுக்கு 60/- தொடக்கம் 70/- வரை வழங்கப்படுகிறது. ஆண்கள் செய்யும் வேலை பெண்கள் செய்யும் வேலையை விடக் கடினமானது எனச் சிலர் வாதிடலாம். ஆனால் பார்க்கப் போனால் பெண்கள் ஆண்களை விடக் கூடுதலான நேரம் வேலை செய்வது மட்டுமில்லாமல் கூடிய கடினமான வேலையையும் செய்கிறார்கள். ஆண்கள் அனேகமாக வெய்யில் உச்சிக்கு ஏறுவதற்கு முன்னர் வேலையை முடித்து விடுவார்கள். அவர்கள் பெரும்பாலும் பாத்தி கட்டுதல், தண்ணீர் இறைத்தல் போன்ற வேலைகளையே செய்வார்கள். பெண்கள் நாள் முழுவதும் களை பிடுங்கல், மிளகாய்ப் பழம் பறித்தல், நாற்று நடுதல் போன்ற வேலைகளைச் செய்கிறார்கள். இது வெய்யில் எரிக்கும், முதுகை முறிக்கும் வேலை என்பதை யாரும் மறுக்க முடியாது. விவசாயத்துறையில் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு இது ஒரு சிறு எடுத்துக்காட்டு.


இனி புனருத்தாரண வேலையில் ஈடுபட்டுள்ளவர்கள் (இவர்கள் அனேகமாக ஆண்களாகவே காணப்படுகிறார்கள்.) பெண்களை எப்படி நோக்குகிறார்கள் எனச் சற்று பார்ப்போம். விதவைகளுக்கு எப்படி புனர்வாழ்வு அளிக்கலாம் என கேட்டவுடன் அவர்களின் வாயில் முதலில் வருவது தையல் இயந்திரங்கள்தான். இதை விட வேறு சில திட்டங்களையும் அவர்கள் வைத்திருக்கிறார்கள். - கோழி வளர்ப்பு, கைப்பணிப் பொருட்கள் (பனை போன்றவற்றில் இருந்து) செய்தல் ஆகியன அவற்றில் பொதுவாக காணப்படுவன. பெண்களுக்கென பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட இவ்வாறான தொழில்களில் மட்டுமே பெண்களை மீண்டும் மீண்டும் ஈடுபடுத்துவதால் ஏற்படும் பிரச்சினைகளை கீழ்வரும் உதாரணத்தின் மூலம் எடுத்துக் காட்டலாம்.

யாழ் குடாநாட்டில் உள்ள ஒரு குறிப்பிட்ட கிராமம் ஒன்றில் ஏறத்தாழ 15 விதவைகள் இருக்கின்றார்கள். குறிப்பிட்ட ஒரு புனர்வாழ்வுத் தாபனம் அப் பதினைந்து விதவைகளுக்கும் தையல் இயந்திரங்களை வழங்கியது. சில மாதங்களுக்குள் பலர் இதனை விற்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். காரணம் என்ன? அக் குறிப்பிட்ட கிராமத்தின் தேவையை நிறைவு செய்ய இரண்டு தையற்காரர்கள் போதும். இந்நிலையில் பதினைந்து தையல்காரருக்கு எங்கு வேலை கிடைக்கப் போகிறது? மேலும் இவர்களுக்கு இத்தையல் வேலை மூலம் கிடைக்கும் வருமானமும் மிகவும் குறைவாகவே உள்ளது. ஒரு நாளைக்கு 40/- உழைப்பதே பெரும்பாடாக உள்ளது. எனவே விதவைகளின் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது நடைமுறைகளை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. முதலாவதாக, பெண்களின் விருப்பம் (பலர் விவசாயத்தில் ஈடுபட விரும்புகிறார்கள்), சந்தை நிலைமைகள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டே திட்டங்களை வரையவேண்டும். அடுத்ததாக மரபு ரீதியான தொழில்களிலேயே பெண்களை ஈடுபட வைக்காமல் எத்துறைகளில் அதிக தேவை இருக்கிறதோ அத்துறைகளில் அவர்களுக்கு பயிற்சி அளிக்கலாம். இன்று நமது நாட்டில் மேசன் வேலை, தச்சு வேலை, நீர்க்குழாய் பொருத்துதல் (Plumbing) போன்ற துறைகளில் அதிக வேலைவாய்ப்பு இருக்கின்றது. இத்துறைகளில் பெண்களை ஈடுபடுத்த எவருமே முன்வராததற்குக் காரணம் என்ன? பெண்கள் மென்மையானவர்கள், கடின உழைப்புச் செய்ய மாட்டார்கள் என எவராவது நினைத்தார்களாயின் நமது தோட்டங்களிலும் கைத்தொழில்களிலும் ஈடுபட்டுள்ள பெண்களை ஒரு தடவை சென்று பார்த்தால் அவர்களது எண்ணத்தை மாற்ற அதிக நேரம் செல்லாது என நினைக்கிறேன்.

நன்றி - நூலகத்திட்டம்



# சரிநிகர்



## கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயப் பிரச்சினை:

# புழுதி படியும் திருச்சபை!

எல்லா அம்சங்களிலும் இனத்துவக் கண்ணோட்டம் விரவிப்போயிருக்கும் இன்றைய சூழலில் மக்களை 'ஆன்மீக வழியில் ஆற்றுப்படுத்துவதாகச்' சொல்லப்படும் மடாலயங்கள், ஆலயங்கள் போன்றவற்றிலும் - குறிப்பாக வேறு மொழிகளைப் பேசும் ஆனால் ஒரே மதத்தவர்கள் சம்பந்தப் பட்ட வரையில் - இனத்துவப் பிளவுகள் தோன்றுவது காலத்தின் கோலம்.

கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் விசனந்தரும் நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளதாகத் தெரிய வருகிறது. கொழும்புப் பத்திரிகைகளும், பேராயர் இல்லமும் இதுவரை ஒருபக்கச் சார்பான தகவல்களையே தந்திருக்கின்றன என்று தெரிய வந்தாலும் இச்சம்பவம் பற்றி பேராயரில்லம் சார்பாக, பிதா எர்னெஸ்ட் பொறுதோட்டா அவர்களது அறிக்கையும், சண்டே ரைம்ஸ் பத்திரிகைக் குறிப்பும் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத உணர்வைத் தூண்டுவதாக இருந்தமையாலும் 'சரிநிகர்' பத்திரிகையாளர்கள் சம்பவத்தையும் பின்னணியையும் புலனாய்வு செய்தார்கள்.

சரிநிகர் நிருபர் வாஸ் கூறும் தரும் தகவல்கள் :

கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயம் பழமை வாய்ந்ததும், புகழ் பெற்றதும் அல்லாமல் பல்வேறு மதத்தினரையும் பல்வேறு இனத்தவர்களையும் பல்வேறு நாட்டினரையும் தன்பால் ஆயிரக் கணக்கில் ஈர்த்து வருகின்ற ஒரு ஆலயமாகும். அந்தோனி என்ற மலையாளத்தவரால் இந்த ஆலயம் நிறுவப்பட்டதாகப் பாரம்பரியத் தகவல்கள் கூறுகின்றன. துறைமுகத்துக்கு அண்மையில் இருப்பதால் கடலோடிகளால் வளர்க்கப்பெற்ற பாரம்பரியமும் இத் தேவாலயத்துக்கு உண்டு என்பது மட்டுமல்லாமல் பெரிய வெள்ளிக்கிழமையன்று கடலோடிகளான 'தோணிக்காரர்களுக்கு' உரிய சிறப்பு நேரமும் இன்றுவரை ஒதுக்கப்பட்டுள்ளது.

பல இன மக்களும் தரிசித்துச் செல்லும் தலமாயிருந்த போதும், கொச்சிக்கடை மக்கள் காலங்காலமாக புனித அந்தோனியார் ஆலயத்தைத் தங்களுடைய செல்வம் போலவே வளர்த்து, காத்து வந்திருக்கின்றனர். இம் மக்களை சிங்களவர்-தமிழர் எனப் பிரித்தல் இயலாது.

நீண்ட காலமாகவே கொச்சிக்கடை மக்கள் தமக்கெனத் தனியான ஒரு பங்கு (parish ) ஏற்படுத்தப் பட வேண்டுமெனக் கோரி வந்துள்ளனர். புனித லூசியா ஆலயத்தோடு சேர்ந்த கொட்டாஞ்சேனைப் பங்கிலேயே கொச்சிக்கடை இணைந்திருந்தாலும், பொருளியல் அடிப்படையிலும் வர்க்க நிலைமையையும் பார்க்கிற போது கொச்சிக்கடை மக்கள் தனியான பங்கு கேட்பதன் அர்த்தப்பாட்டிற்கு நியாயம் உள்ளது போலத் . தோன்றுகிறது. கொச்சிக்கடை மக்களுக்குத் தனியான பங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட போதிலும், புனித அந்தோனியார் ஆலயத்தை அது உள்ளடக்கவில்லை என்பதில் கொச்சிக்கடை மக்கள் மனக்கிலேசம் அடைந்திருந்தனர்.

1987இல் புனித அந்தோனியார் ஆலயத்தை 'திருத்தலமாக'ப் ( shrine) பேராயர் அறிவித்ததைத் தொடர்ந்து புனித அந்தோனியார் ஆலய நிர்வாகம் உட்பட அனைத்து விஷயங்களும் (வருமானம் உட்பட) நேரடியாகப் பேராயரின் கீழ் வந்துவிட்டது.

ஆலயத்தின் நிர்வாகப் பிதாவாக நியமிக்கப்பட்ட சைற்றஸ் குருகுலசூரிய (அவருடைய முன்னைய பெயர் சைற்றஸ் பெர்னாண்டோ எனவும் தொல்லியல் ஆய்வை வசதியாகச் செய்யவும், பெரும்பான்மை இனத்துடன் தன்னை இறுக்கமாக அடையாளம் காட்டவும் பெயரை மாற்றியதாகச் சொல்லப்படுகிறது.!) அவர்களால் தான் இப்போதைய பிரச்சினைகள் எழுந்துள்ளதாகத் தெரியவருகிறது.

19.8.90 இலிருந்து புனித அந்தோனியார் ஆலயப் பூசை நேரத்திலும், மொழியிலும் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. இதன்படி தமிழ் மொழியிலான பூசைகள் பல குறைக்கப்பட்டன. மேலும் தொண்டர்களும் சேவகர்களும் ஆலயத்தை விட்டு வெளியேறுமாறும் பணிக்கப்பட்டனர். இந்த மாற்றங்களை எதிர்த்து அமைதியான முறையில் ஆலயத்துள் எதிர்ப்பைத் தெரிவித்தனர் கொச்சிக்கடை மக்கள். எனினும் அசம்பாவிதங்களும், சிறு கை கலப்பும் பின்னர் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது. பேராயரும் வெளியேற முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

பேராயரும், பொறுப்பானவர்களுடன் ஓரளவு புரிந்துணர்வுடன் நடந்து கொண்டு இருந்திருப்பார்களாயின் ஆலயத்தினுள் அன்று 'அசம்பாவிதங்கள்' நிகழ்ந்திராது எனப் பொறுப்பு வாய்ந்த கொச்சிக்கடைப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

உண்மையில் இவ்வாலயப் பிரச்சினை சிங்கள-தமிழ்ப் பிரச்சினை அல்ல. இப் பிரச்சினைக்கு இனவாத முலாம் பூசப்படுவதையும் கொச்சிக்கடை மக்கள் எதிர்க்கிறார்கள். இது வாழிடம் தொடர்பாகவும் குறிப்பிட்ட ஒரு சமூகம் (சிங்களவர், தமிழர் அல்லது பறங்கியர்) தான் பழக்கப்பட்டு விட்ட ஒன்றினைத் திடீரென விடுத்து இன்னொரு சூழலுக்கு மாறுவது தொடர்பானதுமாகும். திருச்சபையும் பேராயரும் கொச்சிக்கடை மக்களைப் புதுச் செட்டித் தெருவிலுள்ள ஆலயத்தை பங்குக்குரிய ஆலயமாகப் பயன்படுத்தும்படி பணிப்பது கொச்சிக்கடை மக்களுக்கு விருப்பமில்லை என்பதால் அதுபற்றித் தீர்மானம் எடுப்பதில் மேலிடம் மக்களின் நுண்ணுணர்வுகளைக் கருத்தில் எடுக்கவில்லை என்பதைச் சுட்டுகிறது.

முன்பு செட்டிமார்களுக்காக அந்த ஆலயத்தை ஒதுக்கி வழங்கும்படி கேட்டுக் கொண்டதும் இதே மேலிடம் தான் என்று கொச்சிக்கடை மக்கள் ஞாபகமூட்டுகிறார்கள். அந்த அந்த இடத்து மக்களின் அபிலாஷைகள் கணக்கில் எடுக்கப்படாததால் தான் இத்தகைய பிரச்சினைகள் எழுகின்றன. இதே போன்ற பிரச்சினைகள் வேறிடத்திலும் ஏற்பட்டுள்ளன. ஜே.ஏ.றெக்ஸ் பெர்னாண்டோ என்னும் கொச்சிக்கடை அன்பர் குற்றம் சாட்டுகிறார் :

"பிதா சைற்றஸ் குருகுலசூரியா தான் தொடர்ச்சியாக நிறையப் பிரச்சினைகள் உருவாகக் காரணமாயிருந்தவர். அவர் வந்த நாளிலிருந்தே இந்த ஆலயம் அவருக்குப் பிடிக்கவில்லை. அவருடைய தொல்லியல் ஆய்வுகளுக்கு உகந்ததாக அமைதியான சூழல் இல்லை என்று அவர் நினைத்தார். அவர் ஒரு புலமையாளர் என்று சொல்வது சத்தியத்துக்கு அப்பாற்பட்டது. ஏனென்றால், (தமிழ்க்) கல்வெட்டு ஒன்றை ஆலயத்துள் கண்டெடுத்த அவர் அதனைத் தன்னோடு எங்கு எடுத்துச் சென்றார் என்றே ஒருவருக்கும் தெரியாது.

வணக்கத்துக்குரிய பிதாமார் தங்களுடைய கலாநிதிப் பட்டப் படிப்புகளை இறையியலோடு வைத்துக் கொள்வது நல்லது. 'வரலாற்றுக்குப் பிழையாக வெளிச்சம்' தருவதில் அவர்கள் ஈடுபடாமலிருந்தால் அது மிகவும் வரவேற்கத் தகுந்தது அல்லவா?

மேலும் 1960இலிருந்து தமிழில் பூசை வைப்பது நிகழ்ந்து வருகிறது' என்பது அப்பட்டமான பொய்யாகும். புகழ் பெற்ற தமிழ் அறிஞரும் பிதாவுமான சுவாமி ஞானப் பிரகாசரினால் எழுதப்பட்ட தமிழ்ப் பிரார்த்தனை நூலை அடியொற்றித் தமிழில் 1954 இலிருந்து பூசைகள் நிகழ்ந்து வந்திருப்பதை நாம் நிரூபிக்க முடியும்..."

"ஆலயத்தை பேராயர் மூடிவிட்டாலும் விரைவில் ஆலயம் மக்கள் வழிபாட்டிற்காகத் திறக்கப்படுமென்று நம்புவோம்" என்கிறார் இன்னொரு அன்பர்.

எது எப்படி இருப்பினும் கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்தின் இச்சிக்கல் கத்தோலிக்கத் திருச்சபையிலும் வேரோடிவரும் சிங்கள-தமிழ் பிளவுகளின் இன்னொரு உதாரணமென்று சொல்லாமலிருக்க முடியவில்லை. 1983 இலிருந்து தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட அரச வன்முறைகளுக்கு எதிராகச் சுண்டு விரலைக் கூட நீட்டப் பேராயரோ திருச்சபையோ தயாராக இருக்கவில்லை. மேலும் பிதா மேர்ய பஸ்தியன் படுகொலை, பிதா செல்வராஜா கடத்திச் சென்று கொல்லப் பட்டிருப்பது போன்ற விஷயங்களில் கத்தோலிக்கத் திருச்சபை என்ன செய்தது என்பது ஆண்டவருக்கே வெளிச்சம். சிறுபான்மை மக்களுடன் தன்னை இனங்காட்டிக் கொள்வதன் மூலம் சிங்கள பௌத்தப் பேரினவாதத்துடன் முரண்பட்டுப் போரிடவேண்டி வருமே என்ற அச்சத்தினாலும் துணிவின்மையாலும் 'மௌனம் கலக நாஸ்தி' என்ற திருக்கோட்பாட்டைத் திருச்சபை கைக்கொள்கிறது போல!

இந்த நிலை நீடிக்குமானால், இப்போது மனக்கசப்பு அடைந்திருக்கும் இளைய தலைமுறைப் பிதாக்கள் பலர் இலங்கையில் இன்னொரு வகை விடுதலை இறையியலை நாடினாலும் அச்சரியப்படத் தேவையில்லை. ●

## மரண் வேட்டை...

பிரதானமாகவும், தமிழ் மொழியைத் துணையாகவும் கொண்டுள்ளது. எந்த வகையிலும் அவர்களை "இஸ்லாமியத் தமிழர்" என்றோ அல்லது தமிழ் முஸ்லிம்கள் என்றோ "தமிழர்கள்" என்றோ வகைப்படுத்தமுடியாது. "முஸ்லிம்கள்" என்ற அவர்களுடைய இனத்துவ அடையாளம் புதியதொன்றல்ல. மேலும் இத்தகைய இனத்துவ அடையாளங்கள் அல்லது இனங்காணல் (ethnic identity) எப்போதும் ஒரே மாதிரியாகவும் ஒரே நிலைப்பட்டதாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கவும் முடியாது.

தமிழ்நாட்டில் இருக்கும் ஒரு பேராசிரியர் நைனார் முகம்மது வால் "நான் ஒரு தமிழ் முஸ்லிம். இன்பத் தமிழ் எங்கள் மொழி, இஸ்லாம் எங்கள் வழி" என்று தமிழை - மொழி முன் நிறுத்தி - தன்னை இனங்காட்ட முடியும். ஏனென்றால் தமிழ்நாட்டின் தமிழ்-முஸ்லிம் பிரத்தியட்சம் வேறு. இது போலவே மலையாளிகளின் - முஸ்லிம் ஆயினும் கிறித்தவர்கள் ஆயினும - பிரதானமான அடை யாளம் - மலையாளி என்பதே.

இத்தகைய இனத்துவ அடையாளங்கள் காலத்துக்கு காலம் மேலோங்குவதை, தணிவதை அல்லது புதிதாக உருவாவதை அல்லது மாற்றம் பெறுவதை வரலாறு எமக்குத் திருப்பித் திருப்பித் தருகிறது.இத்தகைய மாற்றங்களுக்கு காரணம், குறித்த ஒரு காலகட்டத்தில் ஒரு இனக்குழுமத்தின் சமூக அரசியல் கலாசாரப் பார்வை வீச்சும் (perception) இப்பார்வை வீச்சு குறித்த கால கட்டத்தில் எதிர்கொள்ளும் அல்லது எதிர்கொள்வதாகப் புரிந்து கொள்ளும் "பாதுகாப்பு, அடையாளம் பேணல், கலாசார இருப்பு" தொடர்பான பிரச்சினைகளாகும்.

இந்தப் பின்னணியிலேயே இலங்கை முஸ்லிம்களின் கோரிக்கைகளும் அவர்களுடைய தனித்துவமும் அணுகப்பட வேண்டும். முஸ்லிம்களின் தனித்துவத்தை கலாசாரரீதியாகவும். அரசியல் ரீதியாகவும் அங்கீகரிப்பது, அங்கீகரிப்பது மட்டுமே ஒரு நீண்ட காலக் கண்ணோட்டத்தில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான வேட்கையையும் தமிழ் மக்களின் நல்வாழ்வையும் உறுதி செய்ய வல்லது என்பதை தமிழ்த் தலைமைத்துவமும், மக்களும் தெளிவாகப் புரிந்து செயற்பட வேண்டும்.

இதன் மூலம் நீண்ட காலப் பரஸ்பரப் புரிந்துணர்வு வளர்த்தெடுக்கப்பட்டால், மதம் பிரதானமாக இருக்கும் இன்றைய சூழல் மாறி முஸ்லிம்களும்-தமிழர்களும் "மொழி" அடிப்படையாக ஒரு பொதுவான அடையாளத்தை ஏற்படுத்துவது சாத்தியமாகலாம். (எனினும் இம்மாற்றம் வரலாற்றுக்குரியது மட்டுமன்றி இரு இனக்குழுமத்தின் தலைமைத்துவத்திலும், புத்திஜீவிகளின் அறிவார்த்தமான பணியிலும் தங்கியிருக்கும் ஒரு படிமுறை வளர்ச்சியாகும்).

மேலும் இப் படிமுறை வளர்ச்சி இரு இனக்குழுமங்களுக்கிடையேயும் அவர்களுடைய தனித்துவம் பேணல் தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால் மட்டுமே வெற்றியடையும் என்பதை நாம் மனதில் நிலைநிறுத்த வேண்டும். இந்திய தேசிய வீரரும், புகழ் பெற்ற இஸ்லாமிய அறிஞரும் சிந்தனையாளரும் இந்து-முஸ்லிம் ஒற்றுமைப்பாட்டிற்காக வாழ்நாள் முழுவதும் உழைத்தவருமான அப்துல் கலாம் ஆஸாத் (1888-1958) ஒரு முறை சொன்னார்,

"சுவர்க்கத்திலிருந்து ஒரு தேவதை இறங்கி வந்து 24 மணித்தியாலங்களில் இந்தியாவிற்கு சுதந்திரம் தந்து விடுகிறேன், ஆனால் இந்து-முஸ்லிம் ஒற்றுமைப்பாட்டை மறந்து விடு என்று என்னைக் கேட்டால், நான் அந்தத் தேவதைக்குச் சொல்லக் கூடியது இதுதான் இந்திய சுதந்திரத்தை நான் இழக்கத் தயார் ஆனால் இந்து-முஸ்லிம் ஒற்றுமைப்பாட்டை அல்ல. சுதந்திரம் வரத் தாமதித்தால் அது இந்தியாவின் இழப்பு, ஆனால் இந்து-முஸ்லிம் ஒற்றுமைப்பாடு இழக்கப்பட்டால் அது முழு மானுடத்திற்கும் பெருந்தோல்வி."

தமிழ் மக்களின் விடுதலையும் தமிழ் மக்களும், அவர்களுடைய தலைமைத்துவமும் "திரிகரண சுத்தியாகப்" புரிந்து கொள்ள வேண்டியது இதனைத்தான். ●

சரிநிகர் நிறுவனம், இல. 6, அலோ காலை, கொழும்பு-3, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் (MIRJE) சார்பில், ச. பாலகிருஷ்ணனால், கொழும்பு-10, லீட்டிங் ஸ்டார் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப் பெற்றது. 17-09-1990.